பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை (07-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:163

# அரசு - புலிகள் பேச்சு திட்டமிட்டபடி ஜூனில்!

## சட்ட உதவி வழங்க இந்தியா தயாராம்

கொழும்பு,மே7

★ அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே திட்டமிட்டபடி அடுத்த ஜூன் மாத இறுதியில் முதற்கட்ட சமாதானப் பேச்சு ஆரம்பமாகும்.

★ அதிகாரப்பகிர்வு தொடர்பான சட்ட உதவிகளை வழங்க இந்தியா முன்வந்திருக்கிறது. இதற்கு இந்திய அரசு தனது அரசியல் விற்பன்னர்களினதும் ஓய்வுபெற்ற நீதிபதிகளினதும் சேவையைப் பெறும்.

- இப்படி அமைச்சரவைப் பேச்சாளரான ஜீ.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் கூட்டத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பேராசிரியர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் -

புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது தொடர்பாக அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தேவைக்கேற்ப முடிவு எடுக்கப்படும் என்றார் அமைச்சர் பீரிஸ்.

இப்பொழுது ஜே.வி.பியினரும் அனுரா பண்டாரநாயக்க குழுவினரும் சமாதான உடன்படிக்கை தொடர்பாகப் பிரச்சினைகளை எடுத்துள்ளனரே என்று ஒரு நிருபர் சுட்டிக்காட்டியதற்கு -

"இவர்களுடைய பிரச்சினைகளும் கேள்விகளும் இப்பொழுது அவசிய

(12ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் பணிகளுக்காக

## புலிகளின் மற்றோர் அணி நேற்று திருமலை வந்தது

திருகோணமலை,மே7

அரசியல் பணிகளுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது அணி நேற்று திருகோணமலைக்கு வந்து சேர்ந்தது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் புலிகளின் அணிகள் கட்டம் கட்டமாக வருகைதருவது தெரிந்ததே.

திருகோணமலை மாவட்டத்துக்கான இரண்டாவது அணி நேற்று வந்து சேர்ந்தது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரூபன் உட்பட 15பேர் கடல் மார்க்கமாக 'சேருவில - II' படகு மூலம் திருகோணமலை இறங்குதுறையை வந்தடைந்தனர். -

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடற்படையினரால் தமிழ் மீனவர்களுக்கு அச்சுறுத்தல்

### திருமலைக் கடற்பரப்பில் சம்பவம்

கொழும்பு,மே7

திருகோணமலைக் கடற்பரப்பில் மீன்பிடித்து விட்டு கரைக்குத் திரும்பிக்கொண்டிருந்த எட்டுத் தமிழ் மீனவர்கள் கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு சோதனை என்ற பெயரில் அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தமிழ் மீனவர்களின் படகை வழிமறித்த கடற்படையினர், "ஆயுதங்கள் வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டு தமது படகில் இருந்த மீன்கள் மற்றும் உணவுப் பொருள்களைக் கொட்டிக் கிளறி சோதனையிட்டதாகவும்-

துப்பாக்கியால் படகை நோக்கிச் சுட்டு தம்மை விரட்டியதாகவும்-

சம்பந்தப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இன்று அந்த மீனவர்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-12)

## ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் சட்டங்கள் வெகு விரைவில் நாடாளுமன்றில்!

### அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ் தகவல்

கொழும்பு,மே7

ஜனாதிபதி தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைத்தல், விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைக்கும் சட்டங்கள் வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும்.

- அரசியல் விவகார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று இதைத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுகளைப் பேராசிரியர் பீரிஸ் ஊடகவியலாளர்களுக்கு அறிவித்தபோதே ஜனாதிபதியின் அதிகார வெட்டுச் சட்டம் வருவது பற்றி அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த தகவல்களின்படி -

★ நாடாளுமன்றத்தைத் தன்னிச்சையாகக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லாமல்போகும் பெரும்பான்மை ஆதரவுள்ள கட்சியில் பிரதமரினதும் சபாநாயகரின் பரிந்துரைக்கு அமையவுமே ஜனாதிபதி செயற்படவேண்டும்.

★ நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்விருப்பப்படி சுதந்திரமாக வாக்களிக்கமுடியும். அவர்களுக்கு எதிராகக் கட்சி நடவடிக்கை எடுக்க முடியாது.

★ அமைச்சுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்கவும் பரிசீலனைகளை மேற்கொள்ளவும் அமைச்சுக்கு ஒவ்வொன்றாக 27நாடாளுமன்ற உப குழுக்கள் அமைக்கப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### அரசும், விடுதலைப் புலிகளும்

## பரஸ்பரம் குற்றம் சுமத்தினாலும் சமாதான முயற்சிக்கு பங்கமில்லை

### கண்காணிப்புக் குழுத் தலைவர் கூறுகின்றார்

கொழும்பு,மே7

யுத்தநிறுத்தத்தை மீறுவதாக படையினரும் விடுதலைப் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டாலும் சமாதான முயற்சிக்குப் பங்கம் ஏற்படாது என்று நோர்வே கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

யுத்தநிறுத்தம் மீறப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்ட மாத்திரத்தில் சமாதான முயற்சிக்குப் பாதகம் ஏற்படும் என்று தான் கருதவில்லை என கண்காணிப்புக் குழுவின் தலைவரான ரொன்ட் புருகோவிட் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இவ்வாறான சம்பவங்கள் அரசுக்கு மட்டுமன்றி புலிகள் இயக்கத்துக்கும் சங்கடத்தை ஏற்படுத்தும். சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல இரண்டு தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்புக் கிடைக்கிறது.

சம்பவங்கள் தொடர்பாக இரண்டு தரப்பினர் மீதும் குற்றஞ்சாட்டக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பேச்சுக்கு இடந்தர இட்டமில்லா தவை, சட்ட உதவி எண்ட பெயரிலை மூக்கை நுழைக்கினம்...! வலு எச்சரிக்கையாய் இருக்க வேணும் கண்டியளோ...!

### மேலிடத்து உத்தரவிலேயே செயற்பட்டேன்

## கைதான முன்னாள் பொலீஸ் அதிகாரி ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிடுகிறார்

கொழும்பு,மே7

கைதாகியிருக்கும் தமது பதவிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுத் தலைவர் - நிஹால் கருணாரட்ண தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவின் பேரில்தான் நடந்தன என்று சிரேஷ்ட பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியிருக்கின்றார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவை எதிர்த்து ஜனாதிபதியின் மாமனார் கிளிபோர்ட் ரத்வத்தை போட்டியிட்ட போது தம்மையும் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் பலரையும் சபை அலுவலகத்துக்குச் சென்று தமது மாமனாருக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி ஜனாதிபதியே பணித்தார் என்றும் அதன்படியே தாங்கள் அங்கே சென்றார்கள் என்றும் நிஹால் கருணாரட்ண தெரிவித்திருக்கிறார்.

*(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)*

## விமான சேவை நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மே7

பலாலியில் இருந்து இரத்மலானை செல்லும் பயணிகள் விமான சேவைகளின் நேரங்கள் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன்படி, முதலாவது விமானம் காலை 8.45 மணிக்கும், இரண்டாவது விமானம் நண்பகல் 12.15 மணிக்கும், மூன்றாவது விமானம் பிற்பகல் 3.45 மணிக்கும், நான்காவது விமானம் இரவு 9.15 மணிக்கும் பலாலியிலிருந்து புறப்பட உள்ளன.

ஆகவே, பயணிகள் தாம் பயணிக்கும் விமானம் புறப்படும் நேரத்துக்கு 3மணித்தியாலங்கள் முன்பாக யாழ். சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் சமுகமளிக்கவேண்டும் என்றும்-

விமான நேரங்கள் மாற்றப்பட்டிருப்பதால் ஏற்கனவே பயணச்சீட்டு பெற்றுக்கொண்ட பயணிகள் உடனடியாக பயணப்பதிவு அலுவலகத்தை அணுகி தமது பயண நேரத்தை உறுதி செய்துகொள்ளுமாறும் -

கேட்கப்பட்டிருக்கின்றது.(உ-ஒ)

## சந்திரிகா அமெ. பயணம்

கொழும்பு,மே7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அமெரிக்காவுக்குப் பயணமானார். நியூயோர்க்கில் நாளை ஆரம்பமாகவுள்ள சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா.விசேட கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றுவார். 70 நாடுகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

## நீர்கொழும்புத் தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது!

கொழும்பு,மே7

'விடுதலை செய் அல்லது விசாரணை செய்!' என்ற கோரிக்கையை வலியுறுத்தி நீர்கொழும்புச் சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த 12தமிழ்க் கைதிகளும் தமது போராட்டத்தை நேற்றுக் கைவிட்டனர்.

இவர்களது கோரிக்கை குறித்து சட்டமா அதிபருடன் பேச்சு நடத்திய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி நேற்று நீர்கொழும்பு சிறைச்சாலைக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ்க்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புரிந்துணர்வு உடன்படிக்கையை வலுப்படுத்துவதே எமது நோக்கம்

## திருமலை அரசியல் பொறுப்பாளர் ரூபன் தெரிவிப்பு

திருகோணமலை,மே7

தலைவர் பிரபாகரனும் பிரதமர் ரணிலும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை எப்பாடுபட்டாவது எந்தவகையிலாவது வலுப்படுத்துவதே எமது நோக்கம்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரூபன்.

நேற்று திருகோணமலைக்கு வந்து சேர்ந்த விடுதலைப் புலிகளின அரசியல் பிரிவினரின் இரண்டாவது குழுவுக்கு தலைமை தாங்கிவந்த அவா, செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போதே இதனைக்குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தமிழ்ப் பிரதேசங்களில் இடம் பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்துவது தொடர்பாகக் கடந்த மாதம் வன்னியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டிருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. அதன்படி நாம் அதேமாதம் 25ஆம் திகதியே இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்து இருக்காலம். குறைந்தது மார்ச் 24ஆம் திகதி வந்திருக்கலாம். இதற்சாக்க் சேட்டு சண்டை பிடித்து உடன் [illegible] றப்பக் கூடாது என்பதற்காக பொறு[illegible]மாத்து ஏப்ரல் மாதம் அரசியல் பணிகளை ஆரமபித்தோம். அந்தவகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுப்படுத்த வேண்டியதே எமது நோக்கமாக இருக்கின்றது. இதனை இலங்கை அரசுத் தரப்பும் கடைப்பிடிக்குமானால் சமாதான முயற்சியில் வெற்றிநிச்சயம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றால் என்ன என்பது பற்றிய தெளிவை அனைத்துத் தமிழ்மக்களும் ஏற்படுத்த வேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தை ஏற்ற பின்னர் அரச நிறுவனங்களின் ஊழல்கள் பற்றி ஆராய்வோம்.

இடப்பெயர்வுகள் இரண்டு சந்தர்பங்களில் பாரிய அளவில் இடம்பெற்றுள்ளன. ஒன்று 1983ஆம் ஆண்டு. மற்றையது 1990ஆம் ஆண்டு. இக்கால கட்டங்களில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும்போது, அவர்களது பூர்வீகம், எங்கு வசித்தவர்கள் என்பன போன்ற உண்மைத் தன்மைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இன்றைய சமாதான சூழலைக் குழப்புவதற்கு பல தீயசக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன. அவற்றை முறியடிப்பதற்கான முன்னெடுப்புகளாகவே எமது தற்போதைய நடவடிக்கைகள் அமையும். ஒரு தீர்க்கமான, நிரந்தரமான தீர்வு கிட்டும் போது ஏனைய விடயங்கள் பற்றிச்சிந்திக்கலாம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-290)

# சிறையில் பாதிப்படைந்தோருக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி

## 'உதவும் கரங்கள்' திட்டம் மூலம்

யாழ்ப்பாணம்,மே7

பயங்கரவாத மற்றும் அவசர காலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டோரில் கடுமையான உடல், உள பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவும் கரங்கள் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் உதவி வழங்க முன்வந்துள்ளதையடுத்து இதுவரை 14பேர் இணையக் காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் உடல், உள ரீதியாக பாதிப்படைந்தோரை இனங்கண்டு உதவுவதற்காகவே அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சம்பந்தப்பட்டோரை இணைய காரியாலயத்தில் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டிருந்தது.

கடுமையாகப் பாதிக்கப்பட்டோரில் இதுவரை தமது பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் கூடிய விரைவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிவித்துள்ளது. (ஒ-8)

## ஆணைக்குழுக்களை அமைக்கும்

# ஜனாதிபதியின் விசேட அதிகாரம் நீக்கப்படும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு,மே7

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்பாடுகள் அரசமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களைத் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:-

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்பாடுகள் அரசமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கப்படும் - அரசு விரைவில் சமர்ப்பிக்கவுள்ள அரசமைப்புச்சட்டத் திருத்தங்களின் பிரகாரம் இந்த ஏற்பாடுகள் நீக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தற்போதைய ஏற்பாடுகள் தற்கால சமூக நிலைமைகளுக்கு அமைவாக, இல்லை என்று அரசு கருதுகின்றது. அத்துடன் ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாகக் கடுமையான விமர்சனங்களும் எழுந்துள்ளன.

சிவில் உரிமைகளைப் பாதுகாத்தல், கடுமையான தண்டனைகளை விதித்தல் ஆகிய அதிகாரங்கள் விசேட ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரங்களை சட்டத்துறையினரே அமுல் செய்யவேண்டும் என்று அரசு கருதுகிறது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-12)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே7

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

கோப்பாய்ப் பிரதேச செயலக அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி. (க-86)

★ ★ ★

யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான 15வயது, 17வயது, 19வயதுப் பிரிவினரின் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று காலை 8 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகில் உள்ள கரப்பந்தாட்ட சங்க மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (க-86)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான ஹொக்கி சுற்றுப்போட்டிகளில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்கள் வருமாறு:-

பி.ப. 4.00 மணி உடற்கல்வி வி.க. எதிர் '7' ஸ்டார் வி.க.(3ஆம் இடத்துக்கான ஆட்டம் - ஆண்கள் பிரிவு)

பி.ப. 4.30 மணி ஈகிள் ஸ்ரார் வி.க. எதிர் உடற்கல்வி வி.க.(இறுதியாட்டம் - பெண்கள் பிரிவு)

பி.ப. 5.00 மணி பல்கலைக்கழக அணி எதிர் ஓல்கோல்ட்ஸ் வி.க. (இறுதியாட்டம் - ஆண்கள் பிரிவு)

## கால்நடை மருத்துவ நிலையம் புதிய இடத்தில்

புலோலியில் இயங்கிவந்த சாவகச்சேரி கால்நடை மருத்துவநிலையம் எதிர்வரும் 10ஆம்திகதி தொடக்கம் தற்போது தென்மராட்சிப் பிரதேச செயலகம் இயங்கும் கட்டடத்திற்கு அண்மையில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கவுள்ளது. (ஒ-117)

# பத்திரிகைப் பேரவை நடத்தும் பயிற்சிப் பட்டறை ஜூன் மாதம்

## யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகிறது

யாழ்ப்பாணம்,மே7

மக்கள் தொடர்பாடல் அமைச்சின் ஏற்பாட்டில் இலங்கை பத்திரிகைப் பேரவை நடத்தும் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளவென மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள 75இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது.

யாழ். வரும் அமைச்சர் இங்கு ஊடக மையம் ஒன்றையும் திறந்து வைக்கவுள்ளார். (ஒ-8)

# பிரதிப் பொலீஸ்மா அதிபர் நேற்றுக் கைதானார்

கொழும்பு,மே7

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான புலன் விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலீஸமா அதிபர் நிஹால் கருணாரட்ண நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

லஞ்ச ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு அளித்த முறைப்பாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1997இல் மொறவேவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலீஸாருக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கு லஞ்சம் கோரியதாக நிகால் கருணாரட்ணமீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் விசாரணை மேற்கொள்வதற்காகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## பொலீஸாரால் தேடப்பட்டு வந்த

# சுதந்திரக் கட்சிப் பிரமுகர் நீதிமன்றத்தில் சரண்

கொழும்பு,மே7

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன பொலநறுவை நீதிவான் நீதிமன்றில் நேற்றுக் காலை சரணடைந்தார்.

பொலநறுவை நீதிவான் சமன் விக்கிரமாராய்ச்சி சரணைடைந்த அவரை 50ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து ஆணை பிறப்பித்தார்.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் பலவந்தமாக அமைச்சர் எச்.டி.சி.நெல்சனின் மகளின் வீட்டினுள் ஆயுதத்துடன் புகுந்து அவருக்கு மரண அச்சுறுத்தல் ஏற்படுத்தியதாக மைத்திரிபால சிறிசேன மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட இருந்தார். இதன் காரணமாகத் தலைமறைவாக இருந்து வந்ததாகக் கூறப்பட்ட மைத்திரிபால சிறிசேன தற்போது சரணடைந்துள்ளார். (ஒ-12)

## கொழும்பு நகரசபை குண்டுவெடிப்பு:

# விசாரணைக் குழு அமைக்க அரசு தீர்மானித்துள்ளதாம்

கொழும்பு,மே7

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது கொழும்பு நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பாக விசாரணை நடத்தவென மூன்று மேல்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழுவை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது என்று சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

மேற்படி குண்டுவெடிப்புத் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான விசாரணைகளை நீதிமன்றம் நேற்று ஆரம்பித்த சமயம் அரச சட்டத்தரணி இயாஸ் கம்ஸா மேற்கூறப்பட்ட தகவலைத் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட மேல் நீதிமன்றத்தின்முன் விசாரிப்பதற்கும் அதற்காக வழக்குத்தாக்கல் செய்வதற்கும் நேரடிச் சாட்சியங்கள் அவசியம் என்று பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சுட்டிக்காட்டினார்.

நதிபதிகளை நியமிப்பதிலும் பிரச்சினைகள் எழக்கூடும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இதனால் சாதாரண சட்டத்திற்கு அமைவாகவே விசாரணை நடத்துவது உகந்ததாகும் என்று பிரதம நீதியரசர் கூறினார்

இவ்வழக்கு விசாரணை அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. குறிப்பிட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஜனாதிபதி சந்திரிகா உட்பட சில காயமடைந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-12)

## யாழ். பிரதேச நாடகக் கலைஞர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே7

யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடத்தவுள்ள கலை நிகழ்வை முன்னிட்டு கலைஞர்களிடம் இருந்து ஆக்கபூர்வமான சமூக நாடகங்களை எதிர்பார்க்கின்றனர். கிடைக்கும் நாடகங்களில் இருந்து சிறந்த நாடகம் பேரவையினால் தெரிவுசெய்யப்பட்டு கலை நிகழ்வில் மேடையேற்றப்படும். எனவே யாழ். பிரதேச செயலக பிரிவில் வாழும் கலைஞர்கள் தமது நாடகம் குறித்து 2002-05-15ஆம் திகதிக்கு முன் யாழ். பிரதேச செயலருடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதில் பாடசாலை மாணவ நாடகக் குழுவினரும் பங்குபற்றலாம். கூத்து வடிவமற்ற நாடகங்களே இதில் பங்கேற்க முடியும். (ஒ)

# தொடரும் போராட்டங்கள்

யாழ்.மாவட்டத்தில் திணைக்களங்கள் முன்பாக இடம்பெற்று வரும் மறியல் மற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றன.

தொண்டர் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் மறியற் போராட்டம் யாழ்.கல்வி வலயம் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை முன்பாக ஐந்தாவது நாளாகவும் -

கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்களின் மறியற் போராட்டம் கூட்டுறவுத் திணைக்களம் முன்பாக நான்காவது நாளாகவும் -

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் மூன்றாவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தன.

சனி, ஞாயிறு இரு தினங்களும் இடைநிறுத்தப்பட்ட போராட்டங்கள் நேற்று மீண்டும் இடம்பெற்றன. இதனால் திணைக்களங்களின் செயற்பாடுகள் யாவும் செயலிழந்தன. (க-10-51-86)


முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY




BIRTHDAY

பிரான்ஸில் வசிக்கும்
கொயன்ஸ் - மேரி கிறசென்சியா தம்பதிகளின்
செல்வப் புதல்வன் ஏனோஸ்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07-05-2002) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, நோர்வேயில் வசிக்கும் நிக்சன் மாமா, மாமி, மச்சான், யூடி மாமா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சான், பெரியம்மாமார், மாமாமார், நாச்சிக்குடாவில் வசிக்கும் மெதா பெரியம்மா, லண்டனில் வசிக்கும் சின்னமாமி, மச்சாள், பிரான்ஸில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சகோதரர்கள், ஆசை மாமி, மாமா, மச்சான், மச்சாள்மார், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பேழிப் பூட்டி, தாத்தாமார், அம்மம்மாமார், பெரியப்பா, சித்திமார், சித்தப்பாமார், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று கர்த்தர் கிருபையில் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

செல்வன் ஏனோஸ்

99,பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்,
T.P. : 021-3693.

ச.தங்கராஜா
(அம்மப்பா)

(3510)

# பிரான்ஸ் அதிபர் தேர்தலில் ஜக் ஷிராக் பெருவெற்றி!

பாரிஸ்,மே7

பிரான்ஸ் அதிபர் தேர்தலில் ஜக் ஷிராக் பெரும் வெற்றி பெற்றுள்ளார்.

அதிபர் தேர்தலுக்கான இரண்டாவதுசுற்று வாக்களிப்பு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பிரான்ஸ் தேர்தல் வரலாற்றில் மிக அதிகளவான மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஜக்ஷிராக்குக்கு சுமார் 83 சதவீத வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தீவிர வலதுசாரித் தலைவரான லி பென்னுக்கு 17 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

லி பென் இந்தத் தேர்தலின் போது தீவிர வலதுசாரிக் கருத்துக்களை முன்வைத்து போட்டியிட்டார். இதனால் பிரான்ஸில் குடியேறியுள்ள ஏனைய நாட்டவர்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வு ஏற்பட்டது.

ஆனால் தற்போது பிரான்ஸ் மக்கள், லி பென்னை நிராகித்து விட்டமையையிட்டு அங்கு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும் 17 சதவீதம் பேர் லி பென்னை ஆதரித்திருப்பது, அச்சமூட்டும் வகையில் பிரான்ஸில் தீவிர இனவாதம் தலைதூக்குவதையே காட்டுவதாக அவதானிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஜக் ஷிராக் வெற்றி பெற்றதை அடுத்து அவரது ஆதரவாளர்கள் பாரிஸ் நகர வீதிகளில் இறங்கி ஆடிப்பாடித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

வெற்றிபெற்ற பின்னர் மக்களுக்கு உரையாற்றிய ஷிராக், தனது புதிய அரசு குற்றங்களுக்கு எதிராகத் தீவி



தேர்தலில் வெற்றி பெற்ற பின் ஜக் ஷிராக் மக்கள் மத்தியில் உரையாற்றியபோது...

ரமாகச் செயற்படும் என்று தெரிவித்தார்.

"சுதந்திரம் என்பதன் கருத்து பாதுகாப்பு என்பதாகும். அதாவது வன்முறைகளுக்கு எதிராகப் போராடுவதே அதன் அர்த்தம். அதிகரித்து வரும் வன்முறைகளைக் குறைப்பதே நாட்டின் மிக முக்கிய கடமை" - என்றார் ஷிராக். (ம)

பாதுகாப்பு நடைமுறை குறித்து

# கொலம்பிய அதிபர் பஸ்ரானா இராணுவத்தினருடன் பேச்சு

கொலம்பியப் பிரதமர் அன்ரஸ் பஸ்ரானா நாட்டின் வடபகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்து அவசர பேச்சுக்களை இராணுவத்தினருடன் மேற்கொண்டுள்ளார். அவருடன் பாதுகாப்பு அமைச்சரும் அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தனர்.

கடந்த வியாழக்கிழமையன்று நாட்டின் வடபகுதி மாகாணமான செக்கோவின் காட்டுப் பகுதி நகரான குவைப்டோவில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த சண்டையில் 108 பொதுமக்கள் கொல்லப்பட்டதை அடுத்து பிரதமர் இந்தத் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.



இராணுவத்தினர் மத்தியில் பஸ்ரானா

இந்தச் சம்பவத்தில் தீவிரவாதிகள் ஏவிய மோட்டார் ஒன்று கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்ததில் 60 பேர் கொல்லப்பட்டனர். ஏனையோர் இரு தரப்புக்கும் இடையில் நடந்த சண்டையில் கொல்லப்பட்டனர். இதனால் மக்கள் இராணுவத்தினர் மீது கடும் விசனம் கொண்டுள்ளனர்.

இந்த நிலைமைகளை ஆராய்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டியே அதிபர் பஸ்ரானாவும் பாதுகாப்பு அமைச்சர் குஸ்ராவோ பெல்லும் இப்பகுதிக்கு அவசர விஜயத்தை மேற்கொண்டனர்.

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு அதிபர் இராணுவ அதிகாரிகளுக்கு அங்கு உத்தரவிட்டார். (ம)

# பிரிட்டிஷ் பிரதமரே தீவிர இனவெறியர்

## பிரெஞ்ச் அதிபர் வேட்பாளர் கூறுகிறார்

பாரிஸ்,மே7

பிரான்ஸ் அதிபர் தேர்தலில் போட்டியிட்ட தீவிர வலதுசாரித் தலைவரான லி பென் ஓர் இனவெறியர் என்று கருதப்படுபவர். ஆனால் தன்னைவிட பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரே தீவிர இனவெறியர் என்று அவர் கூறியுள்ளார்.

பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரைவிட நான் ஒன்றும் மோசமான இன வெறியர் அல்லர். நான் ஜனாதிபதியாக இருந்தால் பிரான்ஸில் அகதி அந்தஸ்துக்கோரி குவிந்து கிடப்பவர்களை பிளயரிடம் அனுப்பி வைப்பேன். அவர்களை அவர் ஏற்றுக்கொண்டால் என்னை விட அவர் இனவெறியர் அல்லர் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்" - என்றார் லி பென்.

எனக்கு எதிராகக் கமியூனிஸ்டுக்கள், பிஷப்புக்கள் என்று எல்லோருமே ஒன்று திரண்டிருப்பதுதான் ஏன் என்று எமக்குப் புரியவில்லை. அவர்களது நடவடிக்கைகள்தான் வெறித்தனமானவையாக இருக்கின்றன என்றும் லி பென் மேலும் கூறினார். (ம)

உலக அரங்கில்

### பிரான்ஸ் பிரதமர் இராஜினாமா

பாரிஸ்,மே7

பிரான்ஸின் அதிபராக ஜக் ஷிராக் தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து அந்நாட்டின் பிரதமர் லியோனல் யோசப்பின் சம்பிரதாய பூர்வமாக தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை எலிஸி மாளிகைக்குச் சென்ற அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை ஷிராக்கிடம் கையளித்தார். (ம)

### ஈராக் மீண்டும் எண்ணெய் ஏற்றுமதி

பக்தாத்,மே7

இந்த வாரத்தில் இருந்து தான் மீண்டும் எண்ணெய் ஏற்றுமதியை ஆரம்பிக்கப்போவதாக ஈராக் அறிவித்துள்ளது.

பலஸ்தீனத்தில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களை எதிர்த்து கடந்த ஒரு மாத காலமாக ஈராக் தனது எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தி வைத்திருந்தது. (ம)

# மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி வீட்டுக்காவலிலிருந்து விடுவிப்பு

ரங்கூன்,மே7

மியான்மரில் (பர்மா) இராணுவ அரசினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவியான ஆங்ஷான் சூகி நேற்று விடு



தலை செய்யப்பட்டார்.

இதனால் 19 மாதகால அவரது வீட்டுக்காவல் வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

"இனிமேல் அவர் தனது கட்சி நடவடிக்கை உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் சுதந்திரமாக மேற்கொள்ளலாம்" - என்று இராணுவ அரசின் பேச்சாளர் பர்மிஸியுன்டா தெரிவித்தார்.

"இன்று பர்மிய மக்களின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது" - என்றும் அவர் நேற்றுக் கூறினார்.

ஆங் ஷான் நேற்று விடுவிக்கப்பட்டதும் அவரது ஆதரவாளர்கள் மற்றும் கட்சிக் காரர்கள் என ஆயிரக் கணக்கானவர்கள் தலைநகர் ரங்கூனில் கூடி அவரது விடுதலையை மகிழ்வுடன் வரவேற்று ஆடிப்பாடினர்.

அவர்கள் மத்தியில் பேசிய ஆங் ஷான் - என்னுடைய விடுதலையானது நாட்டின் ஜனநாயகம் நோக்கிய பாதையில் மிகப்பெரும் அடியாகும். பர்மிய மக்கள் அனைவரும் இந்த சுதந்திரத்தை மகிழ்வுடன் கொண்டாட வேண்டும் என்று தெரிவித்தார்.

"என்னுடைய நாட்டுக்காகவும், என்னுடைய கட்சிக்காகவும் தேவையான பணிகள் அனைத்தையும் நான் சரிவர ஆற்றுவேன்" - என்றார் சூகி.

ஆங் ஷான் சூகியை விடுவிப்பதில் ஐநா.பெரும் பங்காற்றியுள்ளது. இதற்கென ஐநா., ரஸாலி இஸ்மாயில் என்ற விசேட தூதுவர் ஒருவரை நியமித்திருந்தது.

இராணுவ ஆட்சியாளர்களுடனும் எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் அவர் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதனாலேயே ஆங்ஷான் விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் ஆங்ஷான் தனது கட்சி அலுவலகத்துக்குச் சென்று தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ம)



ஆங் ஷான் சூகி விடுதலையான பின்னர் அவரது ஆதரவாளர்களால் மகிழ்வுடன் வரவேற்கப்படும் காட்சி.

# தீவிரவாதிகளின் தளங்கள் மீது நேபாளப் படையினர் தாக்குதல்!

## 350 பேர் கொல்லப்பட்டதாக அரசு தகவல்

காத்மண்டு,மே7

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் தளம் மீது அரசபடைகள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தரைப் படையினரும் ஆயுதம் தாங்கிய பொலீஸாரும் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலீஸாரும் ஹெலிகளின் சூட்டாதரவுடன் (Fire Power) மலைகளின் மேல் ஏறி இந்த இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்தனர்.

இந்த நடவடிக்கை கடந்த வியாழனன்றே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.



இந்தத் தாக்குதலை நடத்தியதாக நேபாள இராணுவம் தெரிவித்தது.

நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள ரோல்பா பொய்தான் மலைப் பகுதிகளில் உள்ள தீவிரவாதிகளின் தளங்கள் எனக் கருதப்படும் இடங்களிலேயே தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் சுமார் 350 வரையான தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவம் கூறுகின்றது. ஆனால், இதனை பக்கசார்பற்ற செய்திகள் எவையும் உறுதி செய்யவில்லை.

இராணுவத்தின் கூற்று உண்மையானால், நேபாளத்தில் இராணுவம் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் தீவிரவாதிகளைக் கொன்றிருப்பது இதுவே முதற்றடவையாகும்.

இந்த இராணுவ நடவடிக்கையை முடித்துக்கொண்டு துருப்பினர் தமது தளங்களுக்குத் திரும்பிவிட்டனர் என்று அரச தரப்புப் பேச்சாளர் ஆச்சுவட்ட வகேல் தெரிவித்தார்.

நேபாளப் பத்திரிகைகள் சில 600 தீவிரவாதிகள் இந்த இராணுவ நடவடிக்கையின்போது கொல்லப்பட்டதாகச் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த 6ஆண்டுகளில் தீவிரவாதிகளுக்கு ஏற்பட்டமிகக் கடுமையான இழப்பு இது என்றும் அவை குறிப்பிட்டுள்ளன. (ம)

### வடக்கு அயர்லாந்தில் மதக் கலவரம்

பெல்பாஸ்ட்,மே7

வட அயர்லாந்துத் தலைநகரான பெல்பாஸ்டில் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தவர்களுக்கும் இடையே கலவரம் மூண்டது.

பெற்றோல் குண்டுகள், உள்ளூர் தயாரிப்புக் குண்டுகள் சகிதம் இரு சமூகத்தவர்களும் மோதிக்கொண்டனர். இதில் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டது.

பொலீஸார் தலையிட்டுக் கலவரத்தை அடக்கினர். (ம)

# ஜேர்மனியில் வேலைநிறுத்தம்

பொன்,மே7

கடந்த ஏழு வருடங்களில் இல்லாத அளவுக்கு ஜேர்மனியில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நான்கு சதவீத சம்பள உயர்வு கோரி ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இவர்கள் அனைவரும் உலோகத்தினாலான பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் பணி புரிபவர்கள்.

இந்த வேலைநிறுத்தம் நாட்டின் பொருளாதாரத்தை மிகமோசமாகச் சிதைக்கும் என்று வர்த்தகத் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் நிபுணர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

'நாங்கள் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்க வில்லை. எமது பொரு ளாதார மீட்சிக்காகவே நாம் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம் என்றார் ஐ.ஜி. உலோக பொறியியல் அமைப்பின் தலைவர் படன் வுறுட்டெம்பேர்க் தெரிவித்தார். இந்த வேலைநிறுத்தத்தால் 21 நிறுவனங்களில் உற்பத்தி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ம)



## சின்னஞ்சிறு விளம்பரம்

### கைம்மாறிவிட்டது

04-05-2002 சனிக்கிழமை பிற்பகல் கொடிகாமத்திலிருந்து யாழ். நோக்கி பயணித்த மினி பஸ்ஸில் பிரயாணி ஒருவரிடம் கொடுக்கப்பட்ட Bag கைம்மாறிவிட்டது. தவறுதலாகக் கொண்டு சென்றவர் தயவுசெய்து சாவகச்சேரி நியூமாக்கற், செல்வம் கூல்பாரில் ஒப்படைக்கவும். (3497)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. சாதகத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3511)

### திருமணம் வேண்டுமா?

பிரபல திருமண ஆலோசகர் கனடாவில் இருந்து ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமக்களின் விவரங்களுடன் வந்துள்ளார். அவருடன் கலந்தாலோசித்து உங்கள் திருமண தேவைகளை நிறைவேற்றுங்கள். தொடர்பு: இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். காலம்:- மே.10,11,12 (வெள்ளி, சனி, ஞாயிறு) காலை 9.30 மணி.

(3513)

### விற்பனைக்கு

Sony T.V. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.25, சிவன் புது வீதி, நல்லூர்.

(3515)

45நாள்கள் நிரம்பிய நல்லின அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.பாலமுருகன், 167/5, கோயில் வீதி, நல்லூர்.

(3516)

### தவறிவிட்டது

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த பூதப்பிள்ளை சண்முகநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.612793778V) நல்லூருக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் 02.05.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி கிரியோன் கூல்பார் (நியூ மார்க்கட்) இல் அல்லது நல்லூரில் விஜய் ரெக்கோடிங் சென்ரரில் ஒப்படைக்கவும்.

(3507)


# விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய அங்கம் அரசியற் பிரிவு

## பிரபாகரனின் அரசியல் ஆளுமையை வியந்த நோர்வே அமைச்சர்

"விடு[illegible] தலைவர் வேலுப்பிள்ளை[illegible] ஒரு அரசியல்வாதி என்னும் மதிப்பு நிலையில் வைக்கப்படத்தக்கவராகத் தோற்றமளிக்கிறார். அவரது அரசியல் ஆளுமை என்னை வியக்கவைக்கிறது; என்னை உற்சாகமடையவும் வைக்கிறது."

"பிரபாகரன் தன்னை அரசியல்வாதியாகக் காட்டுவதிலுள்ள ஆர்வம், அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான விடயத்தில் காண்பிக்கும் துணிச்சல் என்பவற்றினால் நாமும் ஊக்கம் பெற்றுள்ளோம். சமாதான நடவடிக்கைகளும் வலுப் பெற்றுள்ளன"

"நான் பிரபாகரனை ஒரு கெரில்லாத் தலைவராகவோ அல்லது இராணுவத் தலைவராகவோதான் அறிந்திருக்கிறேன். ஆனால், அவர் அரசியல் விவகாரங்களை ஓய்வமைதியுடன் கையாளும்திறன் போற்றத்தக்கது. அவர் புலிகள் இயக்கத்தை ஓர் அரசியல் இயக்கமாக மாற்றியமைப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளார்"

- இவ்வாறு நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் ஹெலகிசன் கூறியுள்ளார்.

இக்கூற்றுக்களால், பேச்சுக்கள் முறிவடையக்கூடிய சாத்தியக்கூறுகளும் ஏற்படலாம். நாம் எதிர்நோக்க வேண்டிய குறுக்கீடுகளைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க "டைம்ஸ்" சஞ்சிகைக்குத் தெரிவித்த கருத்துக்களை விட வித்தியாசமானவையாக இருக்கின்ற போதிலும் அடிப்படையில் இருவரும் ஒத்த கருத்தையே தெரிவித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க "டைம்ஸ்" சஞ்சிகைக்கு மேலும் தெரிவிக்கையில்,

புலிகள், செப்ரெம்பர் 11ஆம் திகதிய அமெரிக்கத் தாக்குதல்களைக் கண்டித்திருக்கின்றனர். ஏனைய கெரில்லா மற்றும் பயங்கரவாத அமைப்புக்களிலிருந்து தூரவிலகிவிட முயற்சிக்கின்றனர்.

பிரபாகரன் ஒரே தடவையில் 300 செய்தியாளர்களைச் சந்தித்தார். சில கேள்விகளுக்கு மிக நன்றாகவே பதிலளித்தார். அவர் கடந்த காலத்தில் சிக்குண்டுபோக விரும்பவில்லை. தனக்குச் சாதகமான சூழல் இருக்கிறதா என்பதைப் பரீட்சிப்பதற்காகவே செய்தியாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கலாம். பிரபாகரனும் அவரது மனைவியும் தோன்றும் படங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. வணிகப் பெருமக்கள் அணிவது போன்ற உடைகள் அணிந்து அவர் தோனறுகின்றார். அவர் வேறு ஒரு பாத்திரத்தை வகிக்கப்போகிறார் என்று எண்ணத்தோன்றுகிறது. அதற்காகவே அவர்கள் அவரைத் தயாரித்து வருகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது". - இது பிரதமரின் அவதானிப்புக்களாக உள்ளன.

சமாதானத்தில் மிகுந்த அக்கறை காட்டும் இவ்விருவரும் தம்முடன் ஒத்துழைக்கவேண்டிய ஒரு பிரமுகர் பற்றி வெளியிட்டுள்ள இக்கருத்துக்கள், மக்களையும் வியக்க வைக்கும் என்று நம்பலாம். உறங்குபவர்கள்போல் நடிப்பவர்களை எழுந்திருக்கச் செய்யமுடியாதாயினும் அவர்களையும்கூட சிந்திக்கவைக்கும் கருத்துக்கள் இவை.

ஹெலகிசன், பிரபாகரனின் ஆளுமை தன்னை வியக்கவைப்பதாகத் தெரிவித்தமை, அவர் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் போதோ, ஆராயும்போதோ பதற்றமடையவில்லை. ஓய்வமைதியுடன் ஆழமாகச் சிந்தித்து பதிலளிக்கிறார் என்பதைக் குறித்துக்காட்டுவதாக இருக்கிறது.

அதாவது நிறைகுடமாக இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

ஒரு முதற்றரமான இராணுவத் தளபதி என்று விமர்சிக்கப்பட்டவர் பிரபாகரன். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ இவரை தனது இராணுவத் தளபதியாக வைத்திருக்க விரும்பினார் என்ற செய்திகளும் அக்காலத்திலேயே உலவின.

அத்தகையவரிடம் மக்களின் அரசியற் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து முடிவுசெய்யும் திறனை ஹெலகிசன் உற்று அவதானித்தார். அது வியப்பைத் தருகிறது.

இதேவேளை, பிரதமர் ரணில் நான்கே வருடங்களில் ஒரு கெரில்லா இயக்கத்தை மரபுவழி இராணுவமாக மாற்றிய திறமைசாலியிடம் அந்த இராணுவ அமைப்பை ஒரு ஜனநாயக அரசியல் கட்சியாக மாற்றியமைக்கும் ஆளுமையும் இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்கிறார்.

பயங்கரவாதத்தைக் கண்டிக்கும் நல்ல அறிகுறிகளைக் காண்கின்றார். ஏனைய பயங்கரவாதிகளிடமிருந்து தூர விலகிநிற்கும் தன்மைகளையும் அவதானிக்கிறார்.

அது மட்டுமன்றி அவரது உடையணியும் பாங்கையும் ரசிகிறார். மனைவி சகிதம் படங்கள் வெளிவந்ததையும் நோக்கியதுடன் அவர்கள் பிரபாகரனை வேறு ஒரு பாத்திரத்திற்குத் தயாராக்குகிறார்கள் என்றும் ஆதங்கம் கொள்கிறார். அத்துடன் முக்கியமான ஒரு விடயத்தையும் கூறியிருக்கிறார் பிரதமர்.

அதாவது நீச்சல் தெரியாத ஒருவரைத் திடீரென்று ஆழமான கடலுக்குள் தள்ளிவிட்டு நீச்சல் பழக்குகிறார்களோ? என்ற சந்தேகத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

இந்தச் சந்தேகத்திற்கான பதிலை நோர்வே பிரதியமைச்சரே கொடுத்தும் விட்டார்.

சமாதான நாடகத்தின் கதாநாயகன் என்ற வகையில் பிரபாகரனை சமாதானத்தில் அக்கறையுள்ள பலரும் நுணுகி ஆராய்வது இயற்கையானது.

ஆனால், மக்களின் தேவைகளை அரசியல் நடைமுறைகள்மூலம் பெற்றுக்கொடுக்க முடியாதுபோகும் ஒரு கட்டத்தில் போர், அரசியலின் ஒரு தொடர்ச்சியாக தவிர்க்கமுடியாதபடி இடம்பிடித்துக் கொள்கிறது.

மக்களின் தேவைகள் தேக்க நிலையை அடைந்து சிக்கலாகிவிட்ட நிலையில் அந்தச் சிக்கலையே போர் தீர்த்து வைக்கிறது என்பது அறிஞர்களின் கருத்து.

இந்நிலையில், தந்தை செல்வாவின் அரசியல் நிலைப்பாடு, பிரபாகரனிடம் அஞ்சலோட்டப் பாணியில் வரலாற்றினால் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட அரசியற்கோரிக்கைகளையே வேலுப்பிள்ளை பிரபாகரன் கையாளுகிறார் என்பதால் அவர் அடிப்படையில் ஓர் அரசியல்வாதியாவார்.

மனிதாபிமானத்தையும் வரலாற்றுக்கடமையின் சுமையையும் தாங்கிக் கொண்டுள்ள ஒரு தலைவர் பிரபாகரன்.

ஊன்றி நிலைபெற்றுவிட்ட ஆளும் வர்க்கங்களால் அவர் ஒரு பயங்கரவாதியாகவே மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர். வல்லரசுகளாலும், வல்லரசுகளின் வால்பிடிகளாலும் ஏகாதிபத்திய சக்திகளாலும் பயங்கரவாத நாமம் சூட்டப்பட்டவர்.

[illegible]ப்பற்றிய பொதுமக்கள் அபிப்பிராயம் உண்மையும் கற்பனையும் கலந்தவை.

பரந்தமட்டத்தில் அறியப்படாவிட்டாலும், பிரபாகரன் ஏற்கனவே ஓர் அரசியற் தலைவராகவும் இருந்து வருகின்றார் என்பதே உண்மை.

புலிகள் இயக்கத்தில் முக்கியமானதொரு பிரிவாக அரசியற் பிரிவு இருந்துவருகிறது. புலிகள[illegible]ட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அது தீவிரமாக செயற்பட்[illegible]கிறது.

இப்பிரிவில் அன்ரன் பாலசிங்கம் அரசியல் ஆலோசகராகவும் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் இருக்கிறார்கள்.

இப் பிரிவினால் மக்களின் அரசியற் பிரச்சினைகள் கையாளப்பட்டதுடன், அரசியல் ரீதியில் எய்துவிடப்பட்டுவந்த சவால்களுக்கெல்லாம் புலிகளின் நிலைப்பாட்டை அறிக்கைகள் விடுக்கப்பட்டும் வந்தன.

இவை யாவற்றினதும் தலைவராகவே பிரபாகரன் இருந்து நெறிப்படுத்தினார். அவரது மாவீரர் தின உரைகளை அரசியல் எதிரிகள் எல்லோரும் ஆவலுடன் படித்துவந்தனர். இந்த வரலாற்று உரைகள் ஒரு பக்குவம் வாய்ந்த அரசியல்வாதிகளிடமிருந்தே வெளிவரக்கூடியவை.

- வேதர்


## பதவி வெற்றிடம்

நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள ரூலின்ஸ் நிறுவனம் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப எண்ணியுள்ளது.

1. படவரைஞர் (Draughtsman)
2. கணியவியலாளர் (Quantity surveyor)
3. ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் பரீட்சயமான தட்டெழுத்தாளர் (கணனி பாவிக்கும் தகுதி இருப்பது நல்லது).

விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் தயாரித்து நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி:

**'ரூலின்ஸ்'**

விமலம் 6, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (3512)


# 'ஏ-9' வீதி திறக்கப்பட்ட போதிலும் பூரண பயன் கிடைக்கவில்லை!

## வன்னி மக்கள் கருத்து

'ஏ-9' பாதை திறக்கப்பட்டு விட்டதுதான். ஆனால் அதன் பூரணமான பயனை அனுபவிக்க முடியவில்லையே.

- இவ்வாறு கூறுகிறார்கள் வன்னி மக்கள்.

வன்னி சென்று திரும்பிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரமுகர்கள் வன்னி மக்களுடன் கலந்துரையாடியபோது மேற்கண்ட் தகவல் கிடைத்திருக்கிறது.

சேரன் வாணிப மல்லாவிப் பிரதேச முகாமையாளர் நீரவை ஜெயககுமார் தெரிவித்ததாவது:-

"விடுதலைப் புலிகளுடன் அரசு செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பொருளாதார தடை நீக்கப்பட்டு 'ஏ-9' பாதையும் திறக்கப்பட்டு விட்டது. இதனை சர்வதேச ஊடகங்கள் தொடக்கம் உள்ளூர் ஊடகங்கள் வரை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

எனினும் ஓமந்தையில் பயணிகள் படும் துயரம், மக்கள் பொருள்களைக் கொண்டு வருவதில் எதிர்நோக்கும் அவலங்கள் தொடரும் கதைகளாகி விட்டன.

பொருளாதாரத் தடை நீக்கத்தின் போது 5000 ரூபாவுக்கு விற்கப்பட்ட சிமெந்து பக்கெற் ஒன்றின் விலை 650 ரூபாவாகக் குறைந்துள்ளது.

12,000ரூபாவாக இருந்த துவிச்சக்கரவண்டியின் விலை இப்போது 6,700 ரூபா.

240 ரூபாவாக இருந்த பற்றறியின் விலை இப்போது 55ரூபா.

1200 ரூபாவாக இருந்த டயறின் விலை 310 ரூபா

400 ரூபாவாக இருந்த 1லீற்றர் பெற்றோலின் விலை இப்போது 100 ரூபா.

100 ரூபாவாக இருந்த 1லீற்றர் மண்ணெண்ணையின் விலை இப்போது 40ரூபா.

ஆனால், இவற்றை தாராளமாகப் பெறமுடியவில்லை.

'ஏ-9' பாதை திறப்பு அர்த்தமுள்ளதாக வேண்டுமெனில் பொருள்கள் தாராளமாகக் கிடைக்க வேண்டும். விலைகள் மற்ற இடங்கள் போல் இங்கு சமமாக இருக்க வேண்டும்."

**செய்திக் கட்டுரை**

- இவ்வாறு கூறினார் அவர்.

மல்லாவியில் உள்ள தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணக் கிளை உதவி முகாமையாளர் திருமதி கௌரி சுரேஸ் - "இம்முறை ஏற்படுததப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படுக்கை சமாதானத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. போரினால் மக்கள் களைத்துப் போய விட்டனர். ஆனால் மனஉறுதியைக் கைவிடவில்லை". என்று கூறினாார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் கூறுகையில்:-

"சமாதானம், மக்களுடைய குறிக்கோள் அனுபவிக்கும் போதுதான் அது அர்த்தமுள்ளதாக இருக்கும். நெருக்கடியான சூழ்நிலையில் சமாதான முயற்சி வரவேற்கத்தக்கது."

இதேவேளை, வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பயணி ஒருவர் ஐந்து தடவைகள் வாகனங்களிலிருந்து ஏறி இறங்கி வாகனங்களை மாற்றிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

வவுனியாவில் இருந்து ஓமந்தை வரை ஒரு வாகனமும், ஓமந்தையில் இருந்து விளக்குவைத்தகுளம் வரை ஒரு வாகனமும், விளக்குவைத்த குளத்திலிருந்து புளியங்குளம் வரை ஒரு வாகனமும், புளியங்குளத்திலிருந்து முகமாலை வரை ஒரு வாகனமும் முகமாலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு வாகனமும் மாற வேண்டும்.

ஆனால், வவுனியாவில் இருந்து ஓமந்தை செல்லும் போது 3 இடங்களில் மாறுவோரும் உண்டு. வவுனியா பிறவுண் சந்தி, தாண்டிக்குளம்,ஓமந்தை சென்று மூன்று முறை வாகனம் மாற்றும் சந்தர்ப்பமும் உண்டு.

வன்னிப் பயணிகள் ஒருதடவையல்ல நான்கு தடவைகள் மாறியே ஆகவேண்டும்.

நாளொன்றுக்கு 200க்கும் மேற்பட்ட வாகனங்கள், 2000க்கும் மேற்பட்ட பயணிகள் 'ஏ-9' பாதையூடாகப் பயணிக்கும்போது சிரமங்கள் ஏற்படுகின்றன.

முஸ்லிம், சிங்கள மக்கள் கூடுதலாகப் பயணிப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சுற்றுலா செல்வோரும் உள்ளனர். சுற்றத்தவரைச் சந்திக்கச் செல்வோரும் உள்ளனர். சயிக்கிள், உதிரிப்பாகங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள் முதலானவற்றை மக்கள் கூடுதலாகக் கொண்டு செல்வதையும் காணலாம். - என்றார்.

- வி.ரீ.சகாதேவராஜா


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 27 - 08 - 1933



இறப்பு 11 - 05 - 1999

**அமரர் சதாசிவம் சண்முகம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 07.05.2002

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறாது உங்கள் துயர்!

உங்களின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

"குமரபதி"
ஊர் எல்லை தெரு,
மீசாலை மேற்கு, மீசாலை. (3493)

# உதயன்

## யுத்தநிறுத்த மீறல் குற்றச்சாட்டு

கடந்த புதன்கிழமை வாகரைக் கடலில் மீனவர்களின் படகுகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதல் அப்பட்டமான - பாரதூரமான - யுத்த நிறுத்த மீறல் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ் சுமத்தியிருக்கின்றார்கள்.

கடந்த இரண்டு, மூன்று நாள்களாக இப்பத்தியில் நாம் தொடர்ந்து வலியுறுத்திவந்த விடயமே விடுதலைப் புலிகளின் பிந்திய அறிக்கையிலும் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது.

இந்த அறிக்கையில் அரசு - புலிகள் செய்து கொண்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கம் குறித்தும் அதன் அவசியம் குறித்தும் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

நீண்ட பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்லும் இனப்பூசலுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

அத்தகைய நிரந்தரத் தீர்வு குறித்து ஆற அமர இருந்து பேசுவதற்கான நல்லெண்ணப் புறச்சூழ் நிலை தோற்றுவிக்கப்படுவது அவசியமாகின்றது.

இத்தகைய அரசியல் பேச்சுக்கு வழியமைப்பதற்கான சமாதான சூழலை - இயல்பு நிலையை - போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தும் நோக்கிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்பது தெளிவு.

அந்த ஒப்பந்தமும், அதன் பின்னான சமரச நடவடிக்கைகளும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத் தருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றை வெளிப்படுத்தியபோதுதான் 'சாண் ஏற முழம் சறுக்குவது' போன்ற சம்பவங்கள் நிகழத் தொடங்கியிருக்கின்றன.

தீவகத்தில் அரசியல் பணி மேற்கொள்ளச் சென்ற விடுதலைப் புலிகளை கடற்படையினர் தடுத்து நிறுத்தியமை -

தீவக மக்கள் ஏனைய பிரதேசத்து மக்கள் போன்று சுதந்திரக் காற்றை அனுபவிக்கவிடாது தடுக்கப்பட்டு வருபவை -

வாகரையில் மீனவர்களின் படகுகள் மீது தாக்குதல்களை நடத்திவிட்டு, புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வந்த படகு வெடித்துச் சிதறி எரிந்ததாக கதைவிடுவது -

போன்றவை 'முழம் சறுக்கும்' சம்பவங்களாகும்.

இவ்வாறான சம்பவங்களுக்கு கடற்படையே பொறுப்பாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மைய வாரங்களில் பகையுணர்வையும் ஆத்திரத்தையும் ஊட்டும் வகையில் ஸ்ரீலங்கா கடற்படை மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கை என்று புலிகள் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டுவதும் இத்தகைய சம்பவங்களைத்தான்.

"உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களையும், உடன்படிக்கை செய்யப்பட்டதன் நோக்கத்தையும் மீறி கடற்படை நடக்கிறது. அதன்மூலம் வேண்டுமென்றே மோதல் நிலைமைகளைத் தோற்றுவித்து, சமாதான முன்னெடுப்புக்களை முறியடிக்கின்றது." - இப்படி விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் குற்றம் சுமத்தியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

கடற்படையை உரிய முறையில் கட்டுப்படுத்தி, தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அரசுத் தரப்பின் பொறுப்பாகும்.

இல்லையேல், கடற்படையின் அத்துமீறல்கள் சமாதான முன்முயற்சிகளையே அடியோடு தகர்த்து, விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும். அது தவிர்க்க முடியாத பேரிழப்புக்கு வழிசெய்துவிடும்.

பகைமை எண்ணத்தைக் கைவிட்டு சமாதான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி நடக்குமாறு கடற்படையை அரசு பணிக்க வேண்டும் எனப் புலிகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள்.

தற்போதைய சமாதான முயற்சிகள் தடங்கலின்றித் தொடர்வதற்கு இது அத்தியாவசியமானது என்பதை அரசுத் தலைமைப்பீடம் புரிந்துகொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகத் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் நாட்டின் அரசும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் வெவ்வேறு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றர்கள் என்பதை, அண்மைக் காலத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஐ.தே.முன்னணி அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு கால்தடம் போட ஜனாதிபதி கங்கணம் கட்டியிருக்கின்றார் என்பது ஓரளவு அம்பலமாகிக் கொண்டிருக்கின்றது.

அத்தகைய செயற்பாட்டுக்கு கடற்படை துணை போகலாம் என்ற சந்தேகத்தை சாடைமாடையாக இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அந்தச் சந்தேகம் புலிகளுக்கும் இருப்பதை அவர்களின் பிந்திய அறிக்கை வெளிப்படுத்தத் தவறில்லை என்றே கூறவேண்டும்.

சமாதானச் சூழலை கடற்படையினர் குழப்பாமல் பார்த்துக் கொள்வதும் -

சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட களத்தில் உள்ள கடற்படையினரை கருவியாக ஜனாதிபதி பயன்படுத்துவதற்கு அனுமதிக்காமல் உறுதிபடுத்துவதும் -

பிரதமர் ரணிலின் ஐ.தே முன்னணி அரசின் இப்போதைய - தலையாய - பணியாகும்.

இதில் ரணில் தோற்றால், அவரின் அரசியல் எதிர்காலத்துக்கு அது பேரடியாக விழுந்துவிடும் என்பதையும் அவர் மறந்துவிடக்கூடாது.

## ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 10 கோடியில்

# யாழ்.மீனவர்களுக்கு 5 கோடி ரூபாவை வழங்குவது குறித்து கொழும்பில் முடிவு

யாழ்ப்பாணம்,மே7

கடற்றொழில் திணைக்களத்தினால் வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 கோடி ரூபா நிதியில் 5 கோடி ரூபாவை யாழ்.மாவட்டத்துக்கு வழங்குவதென்று கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் உள்ள புனர்வாழ்வு அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்ட கலந்துரையாடலிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், மன்னார், மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் கடற்றொழில் திணைக்களங்களின் உதவிப்பணிப்பாளர்கள், சீனோர நிறுவனத்தின் தலைவர், வடகடல் பிரதேசப் பொது முகாமையாளர் மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அங்கு பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த 5 கோடி ரூபா நிதியின் மூலம் யாழ்ப்பாணம் மற்றும வடமராட்சிப் பகுதிகளில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைப்பதுடன், கடலுணவு பதனிடும் உபகரணங்களும் போக்குவரத்து வாகனங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு 1999 ஆம் ஆண்டுக்கும் பின்பு எந்தவிதமான மானியங்களும் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு மீண்டும் மானியம் வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சின் ஆலோசனையை கடற்றொழில் திணைக்களம் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்தத்தால் அழிவடைந்த கடற்றொழிலாளர்களின் வீடுகள், கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் மீன்பிடிப் படகுகள் ஆகியவற்றின் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்படாதுள்ள மீனவர் குடியிருப்புகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியைக் கடற்றொழில் திணைக்களம் விரைவில் வழங்கவுள்ளது. கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியைப் புனரமைக்கவும் உரிய காணியில் வெறு கட்டடங்களை அமைக்கவும் கடற்றொழில் அமைச்சரிடம் ஒதுக்கீட்டைக் கோருவதெனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளையும் இயந்திரங்களையும் மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்பட்டது.

இவை தவிர விசேடமாக வடபகுதியைப் பொறுத்த வரையில் இங்கிருந்து தென்பகுதிக்குக் கடலுணவுகளை அனுப்பும் போது பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை எனவும் ஆயினும் முன்னுரிமை அடிப்படையில் அப்பகுதிக்கான பாதுகாப்புப் படையதிகாரியிடம் தொடர்புகொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டதுடன் வடக்கு - கிழக்கில் படைமுகாமை அண்டிய பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கக் கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை எனவும் கடற்படை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதாக சமாசத்தின் தலைவர் தெரிவித்தார். (க-10)

## உதவிக் கணக்காய்வாளர்கள் விவகாரம்:

# இரு பிரதிநிதிகள் கொழும்பில் இன்று அமைச்சருடன் பேச்சு

யாழ்ப்பாணம்,மே7

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் உதவிக் கணக்காய்வாளர் சார்பில் இரு பிரதிநிதிகள் கூட்டுறவுத்துறை அமைச்சர் எம்.ஆர்.எம். காதரை இன்று கொழும்பில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதற்கென இரு பிரதிநிதிகளும் கடந்த சனிக்கிழமை கொழும்பு சென்றுள்ளனர். இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்ததும் அமைச்சரை நாடாளுமன்றக் கூட்டத்தில் சந்தித்துத் தமது பிரச்சினை தொடர்பாகப் பேசவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கொண்டுள்ளார். இப்பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா மற்றும் மாகாணக் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் க.பரமலிங்கம் ஆகியோருடனும் தமது பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர். (க-10)

# கணக்காய்வாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை வேதனைக்குரியது

## மீன்பிடியியல் பட்டதாரிகள் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம்,மே7

கூட்டுறவுத் துறையில் கணக்காய்வாளர்களுக்கான வெற்றிடங்கள் இருந்தும் இதுவரை காலமும் அதிகாரிகள் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

கடந்த சில தினங்களாகத் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி உதவிக் கணக்காய்வாளர்கள் மேற்கொண்டு வரும் மறியற்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இவர்களின் மறியற்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புத்தூர் மேற்கு கௌரி மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், புத்தூர் மேற்கு ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் உட்பட பல அமைப்புக்களும் தமது ஆதரவை வழங்கியுள்ளன. (க-10)

### நாளை

சித்திரை 25
புதன்கிழமை
(08.05.2002)
திதி : ஏகாதசி
முற்பகல் 10.27 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
காலை 6.00 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 4.25 - 5.55
ராகுகாலம்: 11.55 - 1.25
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உண்மை உயர்வை அளிக்கும். பொய்மை உயர்வை அழிக்கும்.

# யுத்த அனர்த்தம் காரணமாக நாட்டில் 18 ஆயிரம் விதவைகள்!

கொழும்பு,மே7

அண்மைக் கால யுத்த அனர்த்தங்களால் 18 ஆயிரம் பெண்கள் விதவைகளாகியுள்ளனர் என்று மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்னாயக்கா தெரிவித்திருக்கிறார்.

"பெண்களும் சமாதான உருவாக்கமும்" என்ற தலைப்பிலான நான்கு நாள் கருத்தரங்கைக் கொழும்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.


சமாதானப் பேச்சுக்களை வரவேற்பதுடன் பல பெண்கள் இதில் தீவிர பங்கெடுத்து சமாதானத்தை அடைய முயற்சிக்க வேண்டும். பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கப் பெண்கள் எப்படிப் பழகவேண்டும் என்பது பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

சமாதானத்தை ஏற்படுத்தும் நல்லெண்ணக் குழுவில் பெண்கள் இடம்பெறாதது ஒரு துரதிஷ்ட சம்பவமே என்று கவலை தெரிவித்த அவர், எமது நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் கூட வேறு நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைந்திருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

50க்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், 75 உள்ளூர்ப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இந்த நிகழ்வுக்கு ஐ.நா. விசேட மகளிர் அமைப்பு தலைவியும் இணைப்பாளருமாகிய டாக்டர் ராதிகா குமாரசாமி தலைமைவகித்தார். (க)

# தமிழகப் பேராசிரியர்களுக்கு சைவ மாநாட்டில் கௌரவம்





யாழ்.இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தப்பட்ட சைவ சமய மாநாட்டில் கலந்துகொண்ட தமிழகப் பேராசிரியர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்து சமயப் பேரவை தலைவர் சீ.விநாசித்தம்பி சென்னை இலயோலாக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் அருணை பாலறாவாயன், சென்னைப் பல்கலைக்கழக மெய்யயல் துறைத் தலைவர் இரா.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(படங்கள்: அற்புதன்)

# 'தாயகம்'

## பொற்பதி வீதி,

# முதலாவது ஆண்டு நிறைவு

## ஆதீன முதல்வர் அருளாசி



அன்பு நெஞ்சத்தீர்!

ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளிக்கும் 'தாயகம்' என்னும் தொண்டு நிறுவனம் இன்று தனது ஓராண்டு நிறைவை அடைவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பல நெருக்கடிகளின் மத்தியில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்களின் பெற்றோரை இழந்த பிள்ளைகள் - அகதிகள் - அநாதைகள் என்ற பெயரில் இருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணத்துடன் இயங்கி வருகின்றது. பிள்ளைகளுக்கு வேண்டிய சகல வகையான வசதிகளையும் கொண்டுள்ள 'தாயகம்', நம் சமயத்தின் பெருமையை எடுத்துக்காட்டும் முகமாக சகல மதங்களையும் சேர்ந்த பிள்ளைகளை அரவணைத்து, அவர்களை, நன்மக்களாக உருவாக்கித்தர அரும்பாடுபட்டு வருகின்றது. இந்தநிலையம் ஒருவரிடம் நிறைவான சேவையை 'தாயகம்' ஆற்றியதை முன்னிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வுயர்ந்த பணிக்காக தம்மையே அர்ப்பணித்துச் சேவையாற்றிவரும் அனைத்து அன்பர்களையும் பாராட்டுகின்றோம். இந்நிறுவனம் பல வளர்ச்சிகளைக் கண்டு பல்லாண்டு காலம் சேவையாற்ற இறைவன் அருள்புரிவாராக.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

*நல்லை ஆதீனம்,*
*நல்லூர்.*

## ஆர்வத்துடன் கற்கும் சிறார்கள்



தாயகம் சிறுவர், சிறுமியர் மாலை வேளையில் வாழ்வகத்தில் கல்வியைத் தொடருகின்றனர்.

## அற்புதச் சிறுவர் இல்லம்




நாட்டிலே போர் மேகம் சூழ
நலிந்துடல் மக்கள் மாள
வீட்டிலே குண்டு வீழ
விளை நிலம் அழிந்து மாள
காட்டிலே தஞ்சம் புகுந்து
கதறியே மக்கள் ஏங்க
கொட்டிட பல்குழல்கள் ஒன்றாய்
கொடிய குழிகள் தோண்ட
மட்டற்ற சோகத்தாலே மக்கள்
மடிந்திட கவலை மேவ
கட்டிய கலை நிகர் கூடம்
காக்கின்றது இளைஞர் தம்மை.

பெற்ற நல்சிறார்கள் தம்மை
பேணிட வழியறியாது பெற்றோர்
உற்ற நல் கவலை மேவ கண்டு
உளத்தினில் இரக்கம் கொண்டு
அற்புதச் சிறுவர் இல்லம்
அழகுடன் அமைத்துத் தந்தார்
நற்பெரு சமூகத் தொண்டன்
நலம் திகழ் "சிறிதரனே" ஆவார்
கற்றவர் வியந்து போற்ற
களங்கமில் சிறுவர் இல்லம்
பற்பல சிறப்புச் சேர
பரிதி போல் திகழுதம்மா!

ஐம்பதுக்கு மேலாம் சிறார்கள்
அனைவரும் வறுமைக் கோட்டில்
தம் துயர் தாங்கொணாது
தவித்த நற் சிறுவரேயாம்
செம்மை சேர் கல்வியோடு
சிறப்புற உணவும் தந்து
உம்பரும் பிறரும் போற்ற
உருக்கமாய் அன்பு நல்கி
நம்பிய பெற்றோர் எல்லாம்
நலம்பெற மகிழ்ந்து வாழ்த்த
செம்மையாய் திகழும் இல்லம்
சிறப்புறு தாயகமே ஆகும்

*விகடகவி மு.திருநாவுக்கரசு*
*(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)*
*யாழ்ப்பாணம்.*



## ஆதரவற்றோரை அரவ...

சிறுவர் வாழ்வகமான 'தாயகம்' (07.05.2002இல்) இன்று தன் தாய்மையின் ஓராண்டை நிறைவு செய்கின்றது. யுத்தத்தின் கோரத்தினாலும், குடும்பப் பிரச்சினைகளாலும் பெற்றோரை இழந்து -பிரிந்து, பெற்றோரினால் கைவிடப்பட்டு அநாதைகளான பிஞ்சு நெஞ்சங்கள் பல அன்புக் காகவும் ஆதரவுக்காகவும் ஏங்கித்தவித்து, வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்ட வேளையில், உழைப்பால் உயர்ந்த தனிமனிதன் ஒருவனின் சிந்தனையில் செதுக்கப்பட்ட சிற்பமாகத் திகழ்வதுதான் கோண்டாவில், பொற்பதி வீதியில் கம்பீரமான தோற்றத்துடன் காட்சிதரும் தாயகம்.

தாயகத்தின் வரலாற்றை நோக்கின் அதன் தனித்துவம் விளங்கும். கடந்த ஆண்டு வானம்போல பரந்த மனமுடைய, தொலைநோக்குடைய, எம்மதிப்புக்குரிய சிறி அண்ணாவின் எண்ணத்தில், அவரது துணைவியாரின் உறுதியில் பிறந்த ஒத்துழைப்புடன் பிரசவித்த 'தாயகம்' இல்லத்தை மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் பல புத்திஜீவிகளின் ஆசீர்வாதத்துடன் திறந்துவைத்தார்.

"இருப்போர்க்கும், இனத்தவர்க்கும் ஈவது ஈகை அல்ல. இல்லாதோர்க்கும் புறத்தவர்க்கும் இரங்குவதுதான் ஈகை." என்பதை உணர்ந்து புரட்சிகரமான சமூக மாற்றத்திற்கு முன்னுதாரணமாக இடப்பட்ட அத்திபாரம்தான் தாயகம் என்றால் மிகையாகாது. கருணை நிறைந்த அவ் இல்லத்துள் நுழைந்துவிட்டால் உள்ளத்தில் உறங்கும் கவலைகள் எல்லாம் சொல்லாமல் ஓடிவிடும்.

வாழ்வகத்தில் வாழும் 50 சிறார்களின் ஆனந்தத்தை சொல்ல மொழியில்லை. இங்கு அவர்களுக்கு இல்லையென்று சொல்வதற்கு எதுவுமே இல்லை. இதயத்தில் பல வடுக்களைச் சுமந்து வாடிப்போன மழலைகள் இன்று வாடாமல்லிகைகளாக மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்குள்ள சின்னஞ்சிறார்கள் அதிகாலை 5 மணிக்குத் துள்ளியெழுந்துவிடுவார்கள். தங்கள் காலைக் கடன்களை முடித்து, சாமியறைக்குள் தியானத்தில் ஈடுபடும்போது பார்ப்போர் பரவசம் அடைந்துவிடும் அளவிற்கு மெய்ம்மறந்திருப்...
பயிற்சியில் ஈடுபட்டபின், தங்களிற்கு வழங்கப்பட்...
உணவருந்தி, பாடசாலைக்குத் தயாராவார்கள். த...
வாங்கிய வானில் அவர்களை ஏற்றிச் செல்வார். பின்...
வந்து, உணவருந்தியபின் சிலமணிநேரம் விளையாடிய...
வகுப்புகள் நடைபெறும். இடைவேளையில் மாலை ...
மணிக்கு உணவருந்திய பின் உறக்கத்திற்குச் செ...

கட்டுக்கோப்பான தனிமனித நிர்வாகத்தின் வழிக...
என்ன? என்று கேட்கிறார்கள். ஆம், சிறார்கள் சிறி...
மாமா!!' என்று தங்களைப்பற்றி ஒவ்வொருவராகக் கூறு...
துவதுடன், கண்டிக்கின்ற நிலையில் கண்டிப்புடன் ...
அவருக்குள்ள ஆளுமையின் வெளிப்பாடென்பதே உ...

இந்த இல்லத்தில் சிறுவர்களைப் பராமரிப்பதற்...
செய்வதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், காவலுக்கும், ...
பணியாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதுடன்; பாடசா...
கப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு, கற்பிப்பதற்காகப் பட்டதா...
கப்பட்டு, ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டு படிப்பகத்...
கின்றன. இவ்வாறு எல்லோரும் கடமை உணர்வுடன் தா...

இல்லத்தில் வாழும் சிறுவர்களை நோக்கினால் ...
ஒழுங்கீனங்களினாலும் பாதிக்கப்பட்டு, நிர்க்கதியான ...
மாக, பளைப் பிரதேசத்தில் இராணுவத் தாக்குதலி...
உயிரிழந்த பெற்றோரின் மகன்' என இவ்வாறு ...
வலுவிழந்தவர்கள் இங்கு வசந்தமாக தாயகத்தில் ...



கடந்த புத்தாண்டு தினத்தன்று தாயகம் சிறுவர்கள் புத்...

# சிறுவர் வாழ்வகம்

## ி, கோண்டாவில்

## வு நாள் சிறப்பிதழ் 07-05-2002




### மேலதிக அரச அதிபர் வாழ்த்துகின்றார்



கொக்குவில் கிழக்கு, பொற்ப[illegible] வீதியில் அமைந்துள்ள 'தாய[illegible]' ஐம்பத்திரண்டு இளம் நெஞ்சங்களுக்கு உண்மையில் ஒரு மனம் நிறைந்த, நிம்மதியான வாழ்வைக் கொடுக்கும் ஓர் இல்லமாகும்.

முடிவில்லாத யுத்தத்தினால் பெற்றோரை இழந்த இந்தப் பிள்ளைகளுக்கு தந்தையாகவும் தாயாகவும் இருந்து அவர்களது ஒவ்வொரு விடயத்திலும் கவனஞ்செலுத்தி, அவர்களது வாழ்வுக்கு ஒரு நம்பிக்கைத் தீபம் ஏற்றி வைத்து இந்த நிலையத்தை ஆரம்பித்தனர் திரு.திருமதி வீ.சிறிதரன் தம்பதிகள்.

ஒருவருடைய உதவியையும் எதிர்பாராமல், தனது செல்வத்தை வழங்கி இந்தப் புகலிடத்துக்கு, 'தாயகம்' என்ற பெயரும் சூட்டி, இல்லத்தை ஆரம்பித்து ஒருவருட நிறைவு விழாக் கொண்டாடுகின்றார் திரு.வீ.சிறிதரன். உண்மையில் இது இவர் சமூகத்திற்கு ஆற்றிவரும் பெருந்தொண்டாகும்.

எந்தவித சுய விளம்பரமும் இன்றி அமைதியாக இந்த 'தாயகம்' செயற்படுவதைப் பார்த்து நாம் பெருமைப்படுகிறோம். வசதி படைத்தவர்கள் இவ்வாறான சமூகம் நலம்பெறக்கூடிய அளவுக்கு எவ்வாறு சமூகப் பணியாற்றலாம் என்பதற்கு 'தாயகம்' செயற்பாடு நல்ல உதாரணமாகும்.

'தாயகம்' சிறப்புற, அங்குள்ள இளம் குழந்தைகள் நலன்பெற எல்லாம்வல்ல இறைவன் என்றும் துணைநிற்க வேண்டும் என நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

து.வைத்திலிங்கம்
*மேலதிக அரசாங்க அதிபர்,*
*யாழ்ப்பாணம்.*

### சிவத்தமிழ்ச்செல்வி ஆசி



கொக்குவில், பொற்பதி வீதியில் இயங்கிவரும் 'தாயகம்' என்ற சிறுவர் வாழ்வகத்தின் ஓராண்டுப் பூர்த்தி விழா நிகழவிருப்பது குறித்து நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். நான்கு வயது முதல் பத்து வயது வரையிலான பிள்ளைகள் இந்த நிலையத்தில் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றனர்.

சைவ உணவும், சைவக் கலாசாரமும் இங்கே சிறப்பாக இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள சிறார்கள் பாடசாலைக் கல்வியோடு அறநெறிப் பயிற்சி, உடற்பயிற்சி என்பவற்றைப் பெற்றுவருகின்றனர். அறச்சிந்தனையாளரான வீரசிங்கம் சிறிதரன் அவர்கள் பொறுப்பாளராக தூய சிந்தனையோடு இதனை நெறிப்படுத்திவருகின்றார். ஒன்பதுபேரைக் கொண்ட நிர்வாகசபையினர் தாயகத்தை நிர்வகித்து வருகின்றனர். 'ஏழைகள் சிரிப்பில் இறைவன் இருக்கின்றான்' என்பதில் அசையாத நம்பிக்கை வைத்து வாழும் ஒருசிலரால்தான் எமது சமூகம் முன்னேறுகிறது. இவர்களின் தயவிலே இன்று வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பிள்ளைகள் பலர் புனர்வாழ்வு பெறுகின்றார்கள். உடுபுடைவை, பராமரிப்பு, கல்வி வாய்ப்பு, சுகநலம் பேணல் ஆகியவற்றைத் 'தாயகம்' பொறுப்பேற்று நடத்திவருகின்றது.

இந்த நிலையத்தில் இணைந்துகொள்ளும் பிள்ளைகள் எந்தவிதமான கவலையுமின்றி, நிம்மதியாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். மக்களாய்ப் பிறந்தோர் ஆற்றவேண்டிய சேவைகளில் இது தலையாயது ஆகும். ஆகவே, தாயகப் பணிகளைப் பாராட்டி, அன்பர் சிறிதரன் அவர்களை வாழ்த்தி, நிர்வாகத்தினரைப் போற்றி மேலும் மேலும் 'தாயகம்' எமது மண்ணில் சிறப்பாகப் பணியாற்றவேண்டும் என்று திருவருளை வேண்டி அமைகின்றேன்.

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை.*

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

### ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி....!





எம் நாட்டின் சிற்பிகளாகத் திகழப்போகும் சிறார்கள்.

## வணைக்கும் தாயகம்

மறந்திருப்பார்கள். தியானத்தின் பின் யோகாசனப் ...ழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றிய பின், ...ார்கள். தாயகத்தின் சிற்பி அச்சிறார்க்கு என ...்வார். பின்னர் பாடசாலை முடிந்து, இல்லத்திற்கு ...ளையாடியதும் இல்லத்தில் இருக்கும் படிப்பகத்தில் ...் மாலை நேரத் தியானம் இடம்பெற்று இரவு 9 ...ற்குச் செல்வார்கள்.

...தின் வழிகாட்டலில் சிறுவர்கள் கவலை என்றால் ...ர்கள் சிறி அண்ணாவைக் கண்டவுடன் 'மாமா! ...ாகக் கூறுவதை அன்பாகக் கேட்டு சந்தோஷப்படுத் ...டிப்புடன் வளர்க்கப்படுகிறார்கள் என்றால் அது ...ன்பதே உண்மை.

...ராமரிப்பதற்கும், உணவுத் தேவையைப் பூர்த்தி ...துக்கும், வெளியாருடன் தொடர்பைப் பேணுவதற்கும் ...ன்; பாடசாலை போன்று வகுப்பறைகள் உருவாக் ...கப் பட்டதாரிகள் உட்பட 5 ஆசிரியர்கள் உள்வாங் ...் படிப்பகத்தில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்படு ...ர்வுடன் தாயகம் தனது பயணத்தைத் தொடர்கிறது. ...க்கினால் யுத்தத்தின் தாக்கத் தாலும் சமூகத்தின் ...கதியான வர்களே அவர்களில் அதிகம். உதாரண ...தாக்குதலில் 'ஓட்டோவில் பயணம் செய்தபோது ...வ்வாறு சொல்லமுடியாத சோகங்களால் வாழ ...கத்தில் வாழ்ந்துவருகின்றனர்.

தாயகத்தின் தனித்துவம் என்னவென்றால் ஒழுக்கம், கட்டுப்பாடுகளுடன் தனியொருவரின் நிர்வகிப்பில், எதுவித வெளிப்புற உதவிகளுமின்றி இயங்குவது தான். இங்கு வாழும் சிறார்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் இல்லத்திற்கு வருகைதந்து மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சையளிக்கின்ற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ் வைத்தியர்கள் தாயகத்தின் நலனில் மிகுந்த அக்கறை உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இவை எல்லாவற்றையும் விட, சிறார்களின் மகிழ்ச்சிக்காகவும் பொழுது போக்கிற்காகவும் தொலைக்காட்சி வசதியுடன் விளையாட்டுப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. இச்சிறார்களிடம் எப்படி உங்கள் வாழ்க்கை? என்று கேட்டபோது 'சினப்பில்லாத, குட்டுப்படாத, செல்லச்சீவியம், அந்த மாதிரி' என்கிறார்கள்.

தாயகத்தின் நிறுவுநர், நிர்வாகி, உரிமையாளர் சிறார்களிடம் கூறுவது 'உங்களுக்கு என்ன வேண்டும் என்றாலும் செய்வேன். என் உழைப்பெல்லாம் உங்களுக்குத்தான். ஆனால், இங்கு ஒழுக்கம் உயிரிலும் மேல் படிப்பும் முக்கியம்' என்பதே ஆகும். அவர் விரும்புவது சமூகத்திற்கு அதன் எதிர்கால வழிகாட்டிகள் தாயகத்தில் இருந்து உருவாக வேண்டும் என்பதே ஆகும்.

தாயகத்தின் சேவை நிலைக்க வேண்டும். அதன் தனித்துவம் பேணப்பட வேண்டும். இருப்போர்க்கு செல்வங்கள் சொந்தம். இல்லாதோருக்கு உள்ளங்கள் சொந்தம். நம் எல்லோருக்கும் தெய்வங்கள் சொந்தம். தெய்வத்தின் அருள் தாயகத்திற்கு சொந்தமாகி வாழ்க தாயகம். வளரட்டும் அதன் சேவை. ஓங்கட்டும் அதன் புகழ். நிலைக்கட்டும் அதன் ஆயுள்.

*பொற்பதி வீதி,*
*கோண்டாவில்.*

செல்வி பபி,
'தாயகம்'





...புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

## தொடர்புகொள்ளுங்கள்

**திருக்கணித அன்பர்கள், வாழ்க்கையாளர்களுக்கு**

எம்மிடம் திருமணப் பொருத்தம், ஸ்புடஜாதகம் (உள்நாடு - வெளிநாடு) கணனிமுறை ஜாதகம் என்பவற்றுக்காக ஓடர்தந்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரி மாற்றத்தைக் கருத்திலெடுத்து தொடர்புகொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

வேதாகம சோதிட பூஷணம்
**சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்.**
ஐயாகடையடி,
மீசாலை - சாவகச்சேரி.

(3518)



### இந்து கலாசார அமைச்ச

## பனை அபிவிருத்திச் சபை

### பனங்கூழ் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி

எமது பனம் பொருள் உற்பத்தி நிலையத்தில் அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க வாரத்தில் மூன்று தினங்கள் பனங்கூழ் விற்பனை நடைபெற்று வருகின்றது.

புதன், சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் கூழைப்பருகி இன்புறுங்கள்.

*குறிப்பு:* மேற்படி தினங்கள் விடுமுறையானாலும் விற்பனை நடைபெறும்.

- ★ மரக்கறிக்கூழ் - 20 ரூபா
- ★ மீன் கூழ் - 30 ரூபா

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

இல.05, சோமசுந்தரம் அவனியு,
யாழ்ப்பாணம்.
(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அருகில்)

(சி-22038)


## நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் 2002

கடந்த 1993ஆம் ஆண்டுமுதல் நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலங்களில் தொடர்ச்சியாக எமது குழுவினால் வெளியிடப்பட்டுவரும் மேற்படி மலரின் வரிசையில் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள 10ஆவது வெளியீடான நல்லைக்குமரன் மலரில் முன்னைய எமது 9 வெளியீடுகளிலும் இடம்பெற்றிருக்காததும் மலருக்குகந்ததுமான தலைப்பில் சிறந்த ஆக்கங்களை துறைசார்ந்த அறிஞர்கள், சைவப் பெரியார்கள், கல்விமான்கள் எதிர்வரும் 15.06.2002ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சைவ சமய விவகாரக் குழு,
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

(சி-22037)

### சின்னக்கடை பிரிவில் இடம்பெயர்ந்தோர் இன்று பதிவு

யாழ்ப்பாணம்,மே7

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சின்னக்கடை கிராம அலுவலர் பிரிவில் (J/72) தமது பதிவினை வைத்திருப்போருக்கான இடம்பெயர்ந்தோர் படிவம் பதியப்பட்டு வருகின்றது.

மேற்படி J/72 பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசிப்போர் தமது பதிவுகளை சின்னக்கடை கிராம அலுவலர் அலுவலகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு சகல ஆவணங்களுடனும் வந்து பதிவு செய்துகொள்ளுமாறு சின்னக்கடை கிராம அலுவலா கேட்டுள்ளார்.

(க-13)

### சுழிபுரத்தில் நாளை உடற்பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே7

சங்கானைக் கல்விக் கோட்ட உடற்பயிற்சிப் போட்டி நாளை புதன கிழமை பிற்பகல் 1.30 மணிககு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலி.மேற்குப் பிரதேச செயலர் எஸ்.இரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் (க-13)


## தேவை

**எமது ஸ்தாபனத்துக்கு வேலையாள்கள் தேவை.**

தொடர்பு:-
ஹொட்டல் றொலெக்ஸ்,
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (3521)



## படிவம்

புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலைய அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது.

கல்வித் தகைமை:
க.பொ.த. (சா.த)

வர்த்தமானி பார்வைக்கு உண்டு.

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-22039)


# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

**கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற தலைவரால் 2002ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும்.**

**01.** நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

**02.** ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**03.** தகுதியுடையோர் மட்டும் கீழ்க்காணும் அட்டவணைப் பிரகாரம் உரிய கட்டணங்களை வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கேள்விப் பத்திரங்களை 2002ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (பொ.சேவரி உட்பட) |
|---|---|---|---|
| வல்வெட்டித்துறை நகரசபை கட்டடம் அமைத்தல். கட்டம் - 6 | எம்-8 | 5000/- | 337/50 |

**04.** கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

**05.** கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தலைவரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**06.** நிதி ஏற்பாடு இல்லாதிருக்கும் பட்சத்தில் கேள்வி இரத்துச்செய்து வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

**நகராட்சிமன்ற அலுவலகம்,**
**வல்வெட்டித்துறை.**
2002-04-30

(C/22040)

**சு.சந்திரசேகரம்**
உபதலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

## வட்டுக்கோட்டையில் நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே7

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை ஏ.ஆர்.வி.தடுப்பூசிமருந்து ஏற்றப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முன்பாக நவீன சந்தைக் கட்டடத்திலும், வட்டுக்கோட்டை மிருக வைத்திய நிலையத்திலும் வட்டுக்கோட்டை மூளாய் வீதி மாதர்சங்கத்திலும், சித்தன்கேனி வட்டு.இந்துக் கல்லூரியிலும் நான்கு பிரிவுகளில் தடுப்பு மருந்து போடப்படும்.

இத் தடுப்பு மருந்து எதிர்வரும் 9ஆம் திகதி போடப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-15)

## வாசகர் திருமுகம்

### நூலகர் கடமை நேரத்தில் குளறுபடி

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள நூலகங்கள் யாவும் அவ்வப் பகுதி உள்ளூராட்சி சபைகளினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இங்கு பணி புரியும் நூலகர்கள் அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய உள்ளூராட்சி சபை அதிகாரிகளின் கட்டளைகளை ஏற்று பணியாற்றி வருகின்றனர்.

சில பிரதேச சபைகளில் எழுதுவினைஞர்களே குறிப்பிட்ட பிரதேச சபைகளுக்குப் பொறுப்பாக உள்ளனர். எழுதுநர்களை விட நூலகர்கள் சம்பளம் அதிகமாகப் பெற்றாலும், எழுதுநர்களின் கட்டளைப்படியே செயற்படவேண்டுமென நூலகர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான நூலகங்களில் நூலகர்கள் வாரத்தில் 42 தொடக்கம் 45 மணித்தியாளங்கள் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வாரத்தில் ஆறு நாள்கள் பணியாற்ற வேண்டுமெனவும், போயா விடுமுறை தினங்களிலும் கடமையாற்ற வேண்டுமெனவும் சில பிரதேச சபைச் செயலாளர்கள் பணித்துள்ளனர்.

எந்தச் சுற்று நிருபம் அல்லது ஸ்தாபன விதிக்கோவையின், எப்பிரிவின் கீழ் இவர்கள் இவ்வாறு உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்களோ தெரியவில்லை. யாழ்.பொதுசன நூலகம், கொழும்பு பொதுசன நூலகம், திருகோணமலை பொது நூலகம் என்பன நூலகர்களின் கடமை நேரத்தை வாரம் ஒன்றுக்கு 37 தொடக்கம் 38 3/4 மணித்தியாலங்கள் என வரையறை செய்துள்ளன.

அப்படியானால், கொழும்பு, யாழ்.மாநகரசபை மற்றும் திருகோணமலை நகரசபை அதிகாரிகளுக்கு ஸ்தாபன விதிக்கோவை, சுற்று நிருபங்கள் பற்றி எதுவும் தெரியாதா?. அல்லது பிரதேச சபைகளில் கடமையாற்றும் செயலாளர்களும் எழுதுநர்களும் இவர்களை விட அறிவு கூடியவர்களா? பிரதேச சபைகளில் கடமையாற்றும் நூலகர்களுக்கு விடிவு என்பதே இல்லையா?

யாழ்ப்பாணம் **ஆர்.ரங்கநாதன்.**

### சமாதானச்சூழல் வரும் வேளையில் படையினரை நையாண்டி செய்யலாமா?

அண்மையில் எமது நாட்டில் இருபெரும் தலைவர்களும் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது ஒரு சமாதான சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது. இதனை இரு பகுதியினரும் மிகக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால், இதனைக் குழப்புவதற்கு இன்றைய இளைஞர், யுவதிகள் முயன்று வருகின்றனர். அமைதியைக் கடைப்பிடித்துவரும் இராணுவத்தினரை இளவட்டங்கள் ஏளனம் செய்வதும், நையாண்டி செய்வதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது இராணுவத்தினருக்கு மூர்க்கத் தனமான உணர்வை ஏற்படுத்தி, வன்செயலைக் கட்டவிழ்த்து விடுவதற்கான வாய்ப்பை உருவாக்கக் காரணமாகிவிடலாம். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**- வேலணையூர் வவி.**

### மீறப்படுவதற்காகவா ஒப்பந்தம்?

இந்நாட்டில் மீண்டும் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன நடைமுறைக்கு வந்துள்ளன. யுத்தநிறுத்தம் இடையூறின்றிப் பேணப்பட்டுவருகிறது.

மக்களிடையே இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்கும் நோக்குடனேயே இவ்வொழுங்குகள் பின்பற்றப்படுகின்றன. அமைதித் தீர்வுக்கு வழிசமைப்பனவற்றுள் இவை தலையாயவை.

மக்களின் போக்கு வரவு தடையின்றி நடைபெற வழிவகுக்கப்படாதவரை, அவர்களிடையே இயல்பு வாழ்க்கை மலர்வதற்கான வாய்ப்பு இல்லை. வடக்கு - கிழக்கில் பல பெருந்தெருக்கள் இந்நாள் வரை போக்குவரவுக்குத் திறந்து விடப்படவில்லை.

இவற்றுள் ஒன்று, தென்மராட்சிப்பிரிவில் சரசாலை என்னும் சிற்றூரில் கனகன்புளியடிச் சந்தியூடாகப் பருத்தித்துறை வரை செல்லும் நெடுந்தெரு. சந்திக்கு அணித்தாக, இத் தெருவின் ஓரத்தில் படையினரின் பாசறை ஒன்று உள்ளது. இதனைக் காரணமாகக் காட்டி வ.பி.போ.ச.பஸ் நீங்கலாக, ஏனைய ஊர்திகளினதும், மக்களினதும் போக்குவரவு தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் விளைவு: மட்டுவில் வடக்கு, கமலாசனி வித்தியாசாலையின் மேற்கெல்லையாகவுள்ள, புறக்கணிக்கப்பட்டுச் சீர்குலைந்துள்ள ஓர் ஒடுக்கமான ஒழுங்கையினூடு சரசாலை தெற்கு ப.நோ.கூ. சங்கக் கிளைவரை மக்கள் தம்பயணத்தை மேற்கொள்ள வேண்டிய அவல நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாரஊர்திகள், சிற்றூர்திகள், தட்டிவான்கள், இழுப்பான்கள், மாட்டுவண்டிகள் உட்பட ஊர்திகள் அனைத்தும் இச்சீரற்ற பாதையைப் பயன்படுத்த வேண்டிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. இதன் விளைவாக இப்பாதை எத்தகைய நிலை எய்தியுள்ளது என இங்கு கூறுதல் வேண்டா.

தென்மராட்சியிலிருந்து புலம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் ஆகிய பிரிவுகளில் தங்கியுள்ள மக்கள், தங்கள் வாழ்விடங்களைச் சீராக்கிச் செப்பனிடுவதற்கு நாள் தோறும் தத்தம் பகுதிகளுக்குச் சென்றுவர வேண்டியுள்ளது. நடைமுறையிலுள்ள இப்பாதைத்தடை அவர்களது இயல்பான நடமாட்டத்துக்கு ஊறாக உள்ளது.

அரியாலை, நீர்வேலி, நுணாவில் சந்தி என்பன உட்பட பல இடங்களில் தெருவோரத்தில் படையினரின் பெரும் பாசறைகள் உள்ள போதும் அத்தெருக்களில் போக்குவரவுக்குத் தடை ஏதும் இல்லை. ஆனால, கனகன்புளியடிக்கு அணித்தாகத் தெருவோரத்தில் உள்ள பாசறையைத் தாண்டி இரு திசைகளிலும் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் பின்பற்றப்படும் ஒழுங்கு இங்கு புறக்கணிக்கப்படுவதேன்? மக்களிடையே இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதலே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கம். இதற்கு இத்தடை எவ்வாறு கை கொடுக்கும்?

ஆகவே, படைத்துறையினரும் நம் அரசியற் தலைவர்களும் இத்தடையை அகற்ற விரைந்து செயற்பட வேண்டுகின்றோம்.

சரசாலை **மகான்.**

## நிலாவெளிச் சம்பவம் போன்ற செயல்கள் இனியும் வேண்டாம்

# ஸ்ரீலங்கா படைகளின் யுத்தநிறுத்த மீறல் தொடர்ந்தால் மீண்டும் இரத்த ஆறு ஓடுவதைத் தவிர்க்கமுடியாது!

## மூதூர் மக்கள் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

மூதூர்,மே7

சமாதான விரோதிகளாலும் சிறிலங்கா படையினராலும் அவ்வப்போது நிகழும் திட்டமிடப்பட்ட யுத்த நிறுத்த மீறல்களால் மீண்டும் இம் மண்ணில் இரத்த ஆறு பெருக்கெடுத்து விடுமோ என அஞ்சுகின்றோம். இவ்வாறான யுத்தநிறுத்த மீறல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் நீதியான விசாரணை மேற்கொளளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்வதுடன் இனிமேலும் இப்படியான யுத்தநிறுத்த மீறலகள் இன்றியும், புரிந்துணர்வு ஒப்பந்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதில் இராணுவம் தான்தோன்றித்தனமாக நடக்கக்கூடாதெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

- இவ்வாறு மூதூர் தெற்கு மக்கள் திருகோணமலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் திருமதி விக்டோறியா லுண்டுக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளனர்.

அந்த மகஜரின் விவரம் வருமாறு:-

யுத்த நிறுத்த மீறல்களை கவனத்தில் எடுக்கும்படி கோருகிறோம்.

கடந்த 20 வருடகால யுத்தக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் நோர்வே அரசின் அயராத முயற்சியினால் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம் நிம்மதியான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையை ஏற்படுத்தித் தந்த தங்கள் அரசுக்கும், மக்களும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவ்வேளையில், அவ்வப்போது நிகழும் திட்டமிடப்பட்ட யுத்தநிறுதத மீறல்களால் மீண்டும் இம்மண்ணில் இரத்த ஆறு பெருக்கெடுத்து விடுமோ என அஞ்சுகிறோம். இவ்வாறான யுத்த நிறுத்த மீறல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கீழ் காட்டப்படும் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்து தங்களது கவனத்திற்காகச் சமர்ப்பிக்கிறோம்.

☆ நிலாவெளிக் கிராமத்திற்கு தொழில் தேடிச்சென்ற மூதூர் சந்தோசபுரத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவர்களைக் காயப்படுத்தியமை.

☆ ஏப்ரல் 25ஆம் திகதி லிங்கநகர் கிராமத்தில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தி குடும்ப அட்டைகளைப் பரிசீலித்தமை.

☆ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதி 2இன் கீழ்வரும் 2.1, 2.2, 2.3 சரத்துக்கள் படையினரால் நிறைவேற்றப்படாமை, எடுத்துக்காட்டாக தங்கநகர் விநாயகர் ஆலயம், பாலத்துடிச்சேனை சித்திவிநாயகர் ஆலயம், இருதயபுரம் இருதய வித்தியாலயம், மல்லிகைத்தீவு பாலர் பாடசாலை, மல்லிகைத்தீவு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், லிங்கபுரம் பிரதேச சபைக் கட்டடம் ஆகியவற்றிலிருந்து படையினர் முகாம்களை அகற்றி வெளியேறவில்லை.

இவ்வாறான சம்பவங்களை உற்று நோக்கிப் பார்க்கும்போது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பால் எம்மக்கள் அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளனர். இத்துர்ப்பாக்கிய நிலையிலிருந்து எம்மக்களை மீட்டு, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும், சமாதானத்தின் விரோதிகளை இனங்கண்டு நடவடிக்கை மேற்கொண்டு எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

கடந்த இருபது வருடங்களாக தமிழீழத் தாயகத்தில் வாழ்ந்துவரும் தமிழினம் ஸ்ரீலங்காவின் அராஜகப் பேரினவாதக் கும்பல்களின் திட்டமிட்ட சதியினால் சொந்த இடம் சொந்த உறவுகள் என்பவற்றை இழந்து துடிக்கின்றது. இதுநாள்வரை எமது இனம் சந்தித்தது எல்லாம் துப்பாக்கி வேட்டுக்கள், குண்டுத் தாக்குதல்கள் மற்றும் கோரக் கொலைகளைத்தான். இச்சந்தர்ப்பத்தில் எங்கோ வெகு தொலைவில் அமைதிக்கீற்று தென்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் யுத்தத் தவிர்ப்பு பிரகடனம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. இதனால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பலியாவது சற்று நிறுத்தப்பட்டுள்ளது. மக்கள் நிம்மதிக் காற்றை சிறிது சுவாசிக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவும் உயிர் இழப்புக்களை மீண்டும் ஏற்படுத்தவும் நாட்டின் பொருளாதாரத்தை படுகுழிக்குள் தள்ளவும் அராஜகப் பிசாசுகள் தலையெடுக்கின்றன. இரத்த வெறிபிடித்த இனவாதிகள் திட்டமிட்ட செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளனர். அதன் வெளிப்பாடே நிலாவெளியில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகமாகும்.

காலம் காலமாக தமிழ் மக்கள் மரணத்தையும் காயங்களையுமே கண்டு வந்துள்ளனர். இந்த நிலை மாறவேண்டும். இரத்த ஆறு ஓடும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மனித உயிர்கள் மதிக்கபடவேண்டும். தமிழீழத்தில் வாழும் தமிழினம் சுதந்திரம், தன்னாதிக்கம், இறைமை என்பன கொண்ட இனமாகக கருதப்படவேண்டும் என்ற நோக்கோடு தமிழினத்தின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு இடம்பெறுவதற்கான காலம் கனிந்துகொண்டிருக்கின்றதென சமாதானத்தை விரும்பும் எல்லாத் தரப்பினரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அநாகரிகமானதும், கட்டுப்பாடற்றதுமான அரச படைகளின் இத்தகைய ஈனச் செயல ஏமாற்றத்தையும், சமாதான முயற்சிக்கு குந்தகத்தையும் ஏற்படுத் துவதோடு, எதிர்காலத்தில் அபாயத்தையும் அழிவுகளையும் ஏற்படுத்தி விடுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

சமாதானம் என்பது வெறும் கானல் நீராகிவிடுமோ? கடந்த காலங்களைப் போன்று அர்த்தமற்றதாகி விடுமோ? மீண்டும் விமானக் குண்டுவீச்சுக்களும் ஷெல்லடிகளும், துப்பாக்கிச் சத்தங்களும், அவலக்குரல்களும் தொடங்கி விடுமோ என்ற ஏக்கமும் ஈழத் தமிழா மத்தியில் ஏற்படத் தொடங்கியுள்ளது.

எனவே சர்வதேச சமூகத்தின் கண்களுக்கும் இந்த நாட்டில் மானசீகமாக அமைதி, சமாதானம் என்பவற்றை விரும்பும் சகல தரப்பினரின் காதுகளுக்கும் தெரியப்படுத்தும் வகையில் குரலெழுப்புகின்றோம். கடந்து போன கசப்பான காலம் இனி மேலும் தொடரவேண்டாம் என்னும் ஆதங்கத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் சூத்திரதாரிகளுக்கு உறைக்கும்படி உரைகின்றோம்.

இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாது இருக்கவேண்டும் என்பதைச் சர்வதேச அமைதிக்கும், சமாதானத்திற்கும் பொறுப்பானவர்கள் அக்கறையோடு கருத்தில்கொண்டு ஆவன செய்யவேண்டும்" எனப் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## மூவின மக்களுக்கும் புனர்வாழ்வுப் பணி

# வடக்கு - கிழக்குக்கு நிதியுதவி வழங்க வளைகுடா நாடுகள் பெரிதும் ஆர்வம்

கொழும்பு,மே7

பாரசீக வளைகுடா நாடுகள் பலவும் வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளுக்கு நிதி உதவி வழங்க இருக்கின்றன. இதனால் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய மூவின மக்களும் நன்மை அடைவர்.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் மேற்கொண்ட முயற்சியின் பலன் இது.

பாரசீக வளைகுடா நாடுகள் பலவும் வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு அளிக்கவேண்டிய மக்களின் எண்ணிக்கை, இடங்கள் முதலான விவரங்களை உத்தியோகபூர்வமாகத் தந்து உதவுமாறு அஸ்வரிடம் கேட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்துடனும் தொடர்புகொண்டு புனர்வாழ்வு உதவி வழங்குவது சம்பந்தமான விதிமுறைகளைப் பெறும் முயற்சியிலும் அந்த நாடுகள் ஈடுபட்டுள்ளன.

வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேறியோர், மீளக்குடியேற நிதி உதவிகளை வளைகுடா நாடுகள் வழங்கும்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து முஸ்லிம் மக்களும், திருகோணமலை, அம்பாறை ஆகிய இடங்களில் இருந்து சிங்கள மக்களும் வெளியேறியிருப்பது தெரிந்ததே.

நோர்வே அனுசரணையுடனான சமாதான ஒப்பந்தம் வடக்கு - கிழக்கில் புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்திருப்பதால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழிபிறந்திருக்கிறது என்று அமைச்சர் அஸ்வர் வளைகுடா நாடுகளிடம் சுட்டிக்காட்டியிருக்கிறார். (க)

## காட்டு மரங்களை வெட்டி அழித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### வன்னியில் புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி,மே7

காட்டு மரங்களை வெட்டி அழிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் இது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளனர்.

உலகெங்கிலும் மரங்கள் அழிக்கப்பட்டுவருவதால் ஏற்பட்டுள்ள இயற்கையின் அனர்த்தங்கள் ஏராளம். இந்த அனர்த்தங்களில் இருந்து தமிழ்ப் பிரதேசங்களைப் பாதுகாப்பது நமது கடமை. ஆதலால் மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து, காட்டில் பச்சை மரங்களைத் தறிக்காது ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

இதனை மீறி மரங்களைத் தறிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (க-12)

## 4 ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மீண்டும் சாவகச்சேரிப் பகுதிக்கு!

தென்மராட்சி,மே7

மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு ஏப்ரல் மாத நிவாரணம் வழங்கப்படவுள்ளதையடுத்து சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் நிவாரண விநியோகத்திற்காக நான்கு கிளைக் கடைகளை கடந்த சனிக்கிழமை சங்க எல்லைப் பரப்பில் ஆரம்பித்துள்ளனர்.

மீசாலை மேற்கு, கல்வயல், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி நகர் ஆகிய இடங்களில் இடம்பெயர்வுக்கு முன்னர் இயங்கிய கிளைக் கடைகளை மீள ஆரம்பித்துள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

இதேவேளை, வலிகாமம் பகுதியில் மாகியம்பதி, உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் இயங்கிய கிளைக் கடைகளும், வடமராட்சிப் பகுதியில் தும்பளை, யார்க்கரு ஆகிய இடங்களில் இயங்கிய கடைகளும் மூடப்பட்டுவிட்டன என்றும் -

இக்கடைகளில் நிவாரணம் பெற்றவர்கள் பின்வரும் இடங்களில் தொடர்ந்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாகியம்பதி கிளை மல்லாகம் கிளையுடனும், உடுவில் கிளை சுன்னாகம் கிளையுடனும், மானிப்பாய் கிளை சண்டிலிப்பாய் கிளையுடனும், யார்க்கரு கிளை நெல்லியடிக் கிளையுடனும், தும்பளைக் கிளை துன்னாலைக் கிளையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. (க-117)

## ஹட்டனில் சேமலாபநிதி அலுவலகம்

கொழும்பு, மே7

தோட்டத் தொழிலாளர்கள் சேவையில் இருந்து விலகிய இரண்டு வாரங்களுக்குள் தமது சேமலாப நிதியை மீளப்பெற வசதி செய்யப்படும். இதன் முதல் நடவடிக்கையாக ஹட்டனில் கணனி மயப்பட்படுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி அலுவலகம் திறந்த வைக்கப்பட்டது.

தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தனது அமைச்சின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இப்புதிய அலுவலகத்தை கடந்த சனிக்கிழமை திறந்து வைத்தார். (க)

## பளை மக்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே7

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் யுத்தத்தால் அழிவுக்குள்ளாகி மீளக் குடியமர அனுமதிக்கப்படாத ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான கூட்டம் ஒன்றை இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் ப.நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் இத்தாவில், வேம்பொடுகேணி, இந்திராபுரம், முகமாலை, அரசங்கேணி, கச்சார்வெளி, கிளாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச சேர்ந்த மக்களுக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-13)

## நல்லூரில் சிரமதான நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே7

யாழ்நகர் மைய றோட்டரக் கழக அங்கத்தவர்கள் நேற்றுமுன்தினம் காலை நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் சிரமதான நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)

## மன்னாரில் பெரும்பாலான கல்விப் பிரச்சினைகள் தீர்வு

### அதே இடத்தில் சேவையில் 300 பேர் பங்கேற்பு

மன்னார்,மே7

வ்ன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்த்தீன் மசூரின் அதே இடத்தில் சேவை நேற்றுமுன்தினம் மன்னாரில் நடைபெற்றது. புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் அரச அதிபர் வே. விஸ்வலிங்கம் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமான இச்சேவை மாலைவரை தொடர்ந்தது.

அமைச்ச் நூர்தீன் மசூருடன் ரிசாத எம்.பி., செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.ஆகியோரும் இச்சேவையில் கலந்துகொண்டனர்.

வலயக் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோரால் முன்வைக்கபட்ட கல்வி சம்பந்தமான 90 பிரச்சினைகளில் 50 பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டது.

சுகாதாரம் சம்பந்தமான 32 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. மருநதாளர்கள், விடுதிகள், அம்புலன்ஸ்கள் தொடர்பாக இப்பிரச்சினைகள் இருந்தன. சுமார் 300 பொதுமக்கள் இச்சேவைக்கு வந்திருந்தனர். மன்னாரில் இவ்வாறான ஒரு சேவை நடத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும். தமது காலடிக்கு வந்து பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை மேற கொள்ளப்பட்டது குறித்து மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (க)

## 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரிட்டு 26 ஆண்டுப் பூர்த்தி!

யாழ்ப்பாணம்,மே7

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தமது அமைப்பிற்கு பெயரிட்டு நேற்று முன்தினத்துடன் (மே5) 26 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

1972ஆம் ஆண்டுமுதல் புதிய தமிழ்புலிகள் என்ற பெயருடன் இயங்கி வந்த அமைப்பை 1976 மே 5ஆம் திகதி முதல் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று பெயர்சூட்டி அதன் தலைவராகத் தேசியத் தலைவர் பதவி ஏற்றுக்கொண்டார்.

முதலில் கரந்தடித் தாக்குதல்களில ஈடுபட்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகள், 20வருடங்களின் பின் மரபு வழி இராணுவமாகச் செயற்படத் தொடங்கியது.

1987ஆம் ஆண்டிலிருந்து தனி ஓர் அமைப்பாக தமிழ் மண்ணுக்காக - தமிழ் மக்களுக்காக - போராடிவருகிறார்கள் விடுதலைப் புலிகள்.(க-12)

## வல்லை முத்துமாரி அம்மன் ஆலயம் ஒரு கோடி ரூபா செலவில் புனரமைப்பு

வல்வெட்டித்துறை,மே7

சரித்திரப் பிரசித்திபெற்ற வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயப் புனரமைப்பு வேலைகள் ஒரு கோடி ரூபா செலவில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அடுத்த மாதம் 2ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். 6ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவமும், 7ஆம் திகதி மகாகும்பாபிஷேகமும் நடைபெறும்.

மேற்படி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் கும்பாபிஷேக கிரியைகளை நடத்தி வைப்பார். (எ-ரி)

# பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் கட்டுரையாளர் நாக.சண்முக நாதபிள்ளை எழுதிய தொடர்கட்டுரையின் ஒரு பகுதி இன்று பிரசுரமாகிறது. ஏனைய பகுதிகள் தொடர்ந்து வெளிவரும்.**

முன்னுரை: 'தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்'

என்று பாடித் தமிழினத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டினார் நாமக்கல் கவிஞர்.

*கன்னடமும் கனி தெலுங்கும் கவின் மலையாளமும் துழுவும்*
*உன் உதரத்து உதித்தெழுந்து ஒன்று பல ஆயிடினும்*
*ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்*
*சீரிளமைத் திறன் வியந்து செயல்மறந்து பாடுதுமே'*

என்று தமிழ் மொழியின் செழுமையையும் இளமையையும் சிறப்பித்துப் பாடினார். சி.வை.தாமோதரனார். இப்படி இன்னும் எத்தனையோ புலவர்களின் செந்நாவில் என்றுமுள செந்தமிழின் சிறப்பும் பைந்தமிழ் நாட்டின் பாங்கும், தமிழினத்தின் தொன்மையும் கவிதை வடிவில் களிநடம் புரிந்திருக்கின்றன. அத்தனைக்கும், அதற்கு அப்பாலும் பொருத்தப்பாடாக எங்கள் விருப்பப்படி தமிழ் இனத்துவக்கும் பெற்றி உடையதாக விளங்கிற்று; விளங்குகிறது; இனிமேலும் விளங்கும்.

**நாக.சண்முகநாதபிள்ளை**

'என்று பிறந்தவள் என்றறியாத இயல்பினளாய்' தோன்று தொட்ட பண்பாட்டு விழுமியங்களுடன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சமரச நோக்கோடு உலகம் தழுவியதை ஒப்பமாக ஏற்றுப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி' 'அனைத்துலகும் இன்பமுறவும், எத்திசையும் புகழ் மணக்கவும்' இருந்தவள் எம் தமிழணங்கு. அந்தச் சிறப்பை மீள்பார்வை செய்வதும், அதன் மூலம் இலக்குத்தவறி இழுபட்டுச் செல்லும் எம் மக்களுக்கு எமது முன்னோர் அளித்த அரும் செல்வங்களை துலக்கிக் காட்டுவதும் பரம்பரை பண்பாட்டு உயிர் அணுக்களை மீள் பிறப்பாக்கம் செய்யத் தூண்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### புற வாழ்வில் புகுந்த புதிய மாற்றங்களும் அதனால் ஏற்பட்ட அனுபவ அங்கலாய்ப்புக்களும்

பண்டைத் தமிழகம் பரந்து கிடந்தது வடவேங்கடமும் தென் குமரியும் அதன் எல்லைகளாக இருந்தன. இவற்றுக்கிடையே புகழ்மண்டிக் கிடந்தது தமிழ் நாடு. எத்தனை செல்வம் புவி மீது இருந்ததோ அவை அத்




தனையும் தமிழ்நாடு படைத்திருந்தது. வீரம் செறிந்திருந்தது. வேதம் நிறைந்திருந்தது. பல்வித சாஸ்திரம் பரவிக் கிடந்தது. கல்வி. சிறந்திருந்தது. கலைகள் வளர்ந்திருந்தன. பவிப் பரப்பில் மடகஸ்காரில் இருந்து இந்தியாவரை பரந்துகிடந்த குமரிக் கண்டமே (லெமூறியா) பண்டைத் தமிழகமாக இருந்தது. இந்தத் தமிழகம் கடற் கோளாறினால் அழிக்கப்பட்டது. கொடுங்கடல் பொங்கி எழுந்து செய்த கொடுமையால் பண்டைத் தமிழகம் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டது. ஊடறுத்துச் சென்ற உப்புக்கடல் மேடுறுத்தி நின்ற பகுதிகளை எச்சங்களாக விட்டுச் சென்றது. தமிழ் நாடும் இலங்கையும் பக்க எச்சங்களாகத் தலைநிமிர்ந்து நின்று எமது தொன்மையையும், பண்டைத் தமிழகம் இருந்தது என்ற உண்மையையும் பறைசாற்றி நிற்கின்றன.

### நாகரீக வாழ்வின் ஆரம்பம்

ஆதிமனிதன் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில காட்டில் திரிந்து காய்கனி முதலியவற்றை உண்டும், வேட்டையாடிக் கொன்றவற்றைப் பச்சையாகத் தின்றும், மரநிழலிலும் குகைகளிலும் வாழ்ந்து வந்தான். இது நாகரிகமற்ற காலம். அதன் பின்னர், உணவை வேகவைத்து உண்பதற்கு நெருப்பைக கண்டுபிடித்தான். உடுக்க உடையைக் கண்டுபிடித்தான், இருக்க வீட்டைக் கட்டிக் கொண்டான். இதனை நாகரிகத்தின் தொடக்கமெனலாம். சிறுசிறு குழுக்களாக, நாடோடிகளாக வாழ்ந்த நிலை போய்ச் சமுதாயங்களாகக் கிராமங்களிலும் ஊர்களிலும், பேரூர்களிலும் வாழ்ந்த போது மனித நாகரிகம் வளர்ச்சியடையத் தொடங்கியது. எண்ண வளர்ச்சியும், அறிவு விருத்தியும், கலைகளின் எழுச்சியும், படிப்படியாக நாகரிக மலர்ச்சியை ஏற்படுத்தியது. எனவே கருத்தின் உயர்வும், உள்ளத்தின் விருத்தியுமே நாகரிக வளர்ச்சியாகும் என்பது பெறப்படும். அத்தகைய நாகரிக வளத்தைப் பண் டைத் தமிழகம் பெற்றிருந்தது.

### உலகைக் கலக்கும் அறிவியல் வளர்ச்சி

இதனைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களான புறநானூறு, பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை, மதுரைக காஞ்சி என்ற நூல்கள்மூலம் நாம் அறியக்கூடியதாக



உள்ளது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்ததை விட தற்போது வாழ்வு எவ்வளவோ முன்னேறியுள்ளது. இவையெலாம் புறத்தில் நேர்ந்தவையே. கருவிகளின் முன்னேற்றமே அன்றி வாழ்வின் முன்னேற்றமாக இவை கருதப்படமாட்டா. அறிவியலின் முன்னேற்றம், கருவிகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. இந்த அறிவியலே உலகைக் கலக்கி அழித்துவரும் போாகளுக்கும் காரணமாகி அநாகரிகச் செயல்களைச் செய்யவும் தூண்டுகிறது. எனவே, அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நாகரிகம் வளர்ந்துள்ளது எனத் துணிந்து சொல்ல

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சயாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களீல் தேடிச் சுவைக்கும் திறன் அருகிவரும் தற்கால கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டல் இவை கொண்டு வரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.**

முடியாதுள்ளது. ஏனெனில் இத்தனை ஆண்டுகளாக மனிதன் கட்டிவளர்த்த நாகரிகம் அத்தனையையும் விஞ்ஞானத்தின் உதவியுடன் அவன் கண்டுபிடித்த அழிவுக்கருவிகளால் ஒரு நொடியில் சிதைத்துவிடவும் முடியும்.

பணடைத் தமிழகத்தில் செல்வப பெருமை ஒருபாலும், வறுமைச் சிறுமை மறுபாலும் நிலவியது. பேரூர்கள் செல்வக்குறைபாடின்றி இருந்தன. உணவு, உடை, உறையுள் யாவும் பற்பல வகையினவாக இருந்தன.

"ஊனும் ஊனும், முனையின் இனிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்" (புறம்:381)

எனப் புறநானூறு ஊண் சிறப்பைப் பற்றிக் கூறுகிறது.

"ஆவி அன்ன அவிர்நூல் கலிங்கம்"
(பெரும்பாண் 469)

என உடைச்சிறப்பைப் பெரும் பாணாற்றுப் படை விளக்குகிறது.

"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலமும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்"
(பட்டினப்பாலை - 187)

"மலையென மழையென மாடம் ஓங்கி"
(மலைபடு கடாம் 484)

"யாறும் கிடந்தன்ன அகல்நெடுந் தெரு"
(மதுரை காஞ்சி)

என்றவாறு பேரூர்களின் மதில், வாயில், மாடம், தெரு முதலியவற்றின் சீரிய அமைப்புகளையும் பெருமைகளையும் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறு செல்வ வாழ்வில் திளைத்திருந்த மக்களைச் சுற்றி வறுமையும் கடுங் கூத்தாடியது. செல்லடித்து உழுத்துப் போன வீட்டின் தூண்கள், காளான் பூத்திருந்த அடுப்புகள், பசியால் வருந்திக் கிடந்த நாய்கள், குப்பையில் கிடந்த கீரைகளைக் கிள்ளி உப்பில்லாமல் வேகவைத்து உண்ட இல்லத்தலைவிகள், வறுமையால் வாடி ஒருநேர உணவிற்கே கதியில்லாமலிருந்த புலவர்கள் என்போரையும் நாம் பண்டைத் தமிழகத்தில் காண்கின்றோம்.

### அறநெறி வாழ்வு மேலானது

அக்காலத்து அறிஞரும் புலவரும் வேந்தர்தம் செல்வத்தை மதியாமல், வறியவரே ஆயினும் அறிவுடையவர் தம் நல்லுணர்வையே மதித்தனர். வேந்தர்தம் படை வன்மையினையும், அழிக்கும் ஆண்மையினையும் பெருமையுடையன என்று போற்றாது 'அரசே, யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற்பெரும் படையால் பெருகிச் சிறந்திருக்கின்ற அரசு சிறப்புடைய தெனக்கொள்ளல் வேண்டா; அரசின் வெற்றிக்கு அடிப்படை இப்படைப் பெருமை அன்று, அறநெறியே என்று பாண்டிய அரசனுக்கு எடுத்துரைத்தார்.

மதுரை மருதனின் நாகனார் என்ற புலவர்.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமர் எனக்கோல் கோடாது
பிறர் எனக் குணம் கொல்லாது....வாழிய"(புறம் 55)

என்று மேலும் வலியுறுத்தினார்.

மக்கள் வாழ்வில் பாட்டு வடிவில் நிலைத்து நிற்பவர் புரவலரும், புலவருமாகிய இரு திறத்தாரேயாவார். இவர்களுடைய எழுத்துக்களே பண்டைத்தமிழ் நாகரிகத்தின் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவனவாகும். அந்த அனுவப் புதையல்களால் அங்கலாய்ப்புறாமல் அறநெறிக் கோட்பாடுகளைப் புரிந்துகொண்டு ஆக்கபூர்வமாக சிந்தித்து தமிழ்ச் சான்றோனின் நோக்கங்களை ஈடேற்றுவோமாக.

# புலிகளின் மூன்றாவது அலுவலகம் நேற்று நெல்லியடியில் திறப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டத்துக்கான மூன்றாவது அரசியல்துறைப் பணிமனை நேற்றுக்காலை 10 மணியளவில் நெல்லியடியில் வதிரிச் சந்திக்கு அருகில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மேஜர் சோதியாவின் பெற்றோர் ஈகச்சுடரை ஏற்றி வைக்க புதிய பணிமனையின் பொறுப்பாளர் தயா தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து போராளிகளால் மலரஞ்சலி செய்யப்பட்டதுடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் அகவணக்கமும் இடம்பெற்றன. பணிமனையின் பெயர்ப் பலகையை கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் திருமதி வல்லிபுரம் திரைநீக்கம் செய்து வைக்க பணிமனையை கரவெட்டி பங்குத்தந்தை அந்தனீஸ் அடிகளார் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஆசியுரைகளும், உரைகளும் இடம்பெற்றன. உரைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் பாப்பா, தமிழ்விழி உட்படப் பலர் நிகழ்த்தினார்கள் நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்களும் கலந்து கொண்டனர்.

புலிகளின் முதலாவது பணிமனை கொக்குவிலும் இரண்டாவது பணிமனை வல்வெட்டித்துறை, வேம்படிப் பகுதியிலும் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே.

(க-10-173)

# குருநகர் யாகப்பர் ஆலயத்தில் இறுதிக்கட்ட திருத்த வேலைகள்

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் ஐந்தாம் கட்ட - இறுதித் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

குருநகர் மக்களின் பங்களிப்புடன் நடைபெற்றுவரும் இறுதிக் கட்டத்திருத்த வேலைகளில் ஆலயத்துக்கு வர்ணம் தீட்டுதல், மின் கம்பிகளை திருத்திப் பொருத்துதல், ஆலயத்தின் உட்பக்க வேலைகள் ஆகியவை ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கு முன்னர் திருத்த வேலைகள் நிறைவடையும் என ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஏ.பி.ஜெயசேகரம் அடிகளார் தெரிவித்தார்.

(க-51)

# பாஷையூர் கடற்கரைப் பகுதியில் மேலும் புதிய காவலரண்கள்!

குருநகர்,மே7

பாஷையூரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் பாஷையூர் மீன்வாடியில் இருந்து கிழக்குப் பக்கமாக துண்டிவரையுள்ள கடற்பகுதியில் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும் பாஷையூரில் அமைந்துள்ள இறங்குதுறையில் சேதமடைந்த நிலையில் கடலில் விடப்பட்டிருந்த அனைத்து வள்ளங்களும் இப்பகுதி இராணுவத்தினரின் பணிப்புக்கு இணங்க நேற்று மீனவர்களால் கரைக்கு இழுத்துவரப்பட்டன.

நேற்று மீன்பிடிக்க கடலுக்குச் சென்று கரைதிரும்பிய மீனவர்களை படையினர் வீடுகளுக்குச் செல்லவிடாமல் தடுத்துநிறுத்தி இவ் வேலையைச் செய்வித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-51)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே7

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அனைவரையும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

(க-8)



**யாழ்நகர் மைய றோட்டரக்ட் கழகத்தினர் "றோட்டரக்ட் வாரத்தினை" முன்னிட்டு யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள சைவச்சிறுவர் இல்லத்தில் மூலிகை மரம்நடுகை செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது.**

**இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தம்பதிகள் முதலாவது மூலிகை மரத்தை நட்டு வைக்கின்றனர். அருகில் கழக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர் (9)**



**மூதறிஞர் பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்களின் "திருத்தொண்டு பரவும் நூல்" வெளியீட்டு விழா அண்மையில் காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நடை பெற்றது.**

**இந்த நிகழ்வில் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் நூலாசிரியர் கே.கே.சுப்பிரமணியம் காணப்படுகின்றார். (எ-73)**

# மின்சாரக் கம்பியில் சிக்கி 12வயதுச் சிறுவன் பலி!

## மன்னாரில் சம்பவம்

மன்னார்,மே7

மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு எதிரேயுள்ள ஒழுங்கையில் அறுந்து விழுந்த மின்சாரக்கம்பியில் சிக்கி 12 வயதுச் சிறுவன் பலியானான். மின்கம்பி அறுந்தது குறித்து மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுப்பதில் மின்சார சபையினர் காட்டிய அசமந்தப்போக்கினாலேயே சிறுவன் அநியாயமாகப் பலியானதாகக் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. பிற்பகல் ஒரு மணியளவில் மின்கம்பி அறுந்து விழுந்ததை அவதானித்த ஒருவர் உடனடியாக அதனை மின்சாரசபையிடம் அறிவித்ததாகவும் -

ஆனால், இது தொடர்பாக மின்சாரசபை எந்த நடவடிககையும் எடுக்கவில்லை என்றும் -

சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் அந்த ஒழுங்கையைச் சேர்ந்த சோமசுந்தரம் ஜனார்த்தனன் என்னும் சிறுவன் அவ்வழியே வந்து மின்கம்பியில் சிக்குண்டு இறந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் அச்சமயம் நடைபெற்ற இடம்பெயர்சேவையில் பங்குபற்றிக் கொண்டிருந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டது. மின்சார அத்தியட்சகரைச் சந்தித்து ஊழியர்களின் அசமந்தப்போக்குக் குறித்து கண்டனம் தெரிவித்ததுடன் மன்னார் பொலீஸ் நிலையத்திற்கும் சென்று முறையிட்டார்.

இதேவேளை மன்னார் எமில் நகரில் குளத்தில் குளிக்கச் சென்று யோகலிங்கம் யூட்றொபின்சன் (வயது-9) என்பவர் குளத்தில் மூழ்கி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## கொழும்புக்கு விடைத்தாள்கள்

யாழ்ப்பாணம்,மே7

தற்பொழுது நடைபெற்று வரும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் முதலாவது தொகுதி விடைத்தாள்கள் யாவும் இன்று விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (க-10)

## ஊழியர் குறித்த கணிப்பீடு

வலி.வடக்கு,மே7

அரச திணைக்களங்கள், சபைகள், கூட்டுறவுத்துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் சம்பந்தமான புள்ளிவிவரக் கணிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தினால் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மேற்படி புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

இவ்வாண்டுக்கான புள்ளிவிவரத் திரட்டு ஜூன் முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்படுகின்றது. இது பற்றிய சுற்றுநிருபம் சகல அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கும் புள்ளிவிவரத் திணைகளத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

# நாகர்கோவில் பிரதான பாதையை திறக்க உதவுமாறு வேண்டுகோள்

வடமராட்சிகிழக்கு,மே7

நாகர்கோவில் பாதையைத் திறந்து, நாகர்கோவில் மக்களை மீளக்குடியமர உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினால், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் மகஜர் மூலம் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாகர்கோயில் பிரதான பாதை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நுழைவாயிலாக உள்ளது.

இப்பாதையினூடாகத்தான் செம்பியன்பற்று தொடக்கம் சுண்டிக்குளம் வரை மக்கள் மீளக்குடியமர செல்ல வேண்டியிருப்பதனாலும் -

அப்பகுதியில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களின் போக்குவரத்து வசதி கருதியும் -

நாகர்கோயில் வீதித் தடையினை அகற்ற சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி ஆவனசெய்யவும். - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் சம்பந்தமாக நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது. (ஒ-173-182)

## தென்மராட்சியில் வீடுகள் புனரமைக்க கொடுப்பனவு

தென்மராட்சி,மே7

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500பேருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வீடுகள் புனரமைக்க தலா 50ஆயிரம் ரூபா வழங்குவதற்காக விவரங்கள் அந்தந்த கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டுவருகின்றன.

சாவகச்சேரி நகரம், கல்வயல், நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு, சங்கத்தானை, கோயில் குடியிருப்பு, மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, தென்மட்டுவில், மண்டுவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த நிரந்தரக் காணி உள்ளவர்களுக்கு இக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## திறந்த பல்கலை பரீட்சை முடிவுகள் வெளியாகின

கொக்குவில்,மே7

திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா மற்றும் எந்திரவியல் டிப்ளோமா தரம் I ஆகிய கற்கைநெறிகளுக்கான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சை முடிவுகளை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-69)

# இலங்கைத் தமிழா உட்பட தமிழகத்தில் இருவர் கைது!

## வெடிப்பொருள் கடத்த முயன்றனராம்

இராமநாதபுரம்,மே7

இலங்கைக்கு வெடிபொருள்களை கடத்த முயன்றதாகக் கூறப்படும் இரண்டு பேரைத் தமிழகப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இராமேஸ்வரம் பொலீஸார் கடற்கரைப் பகுதிகளில் தீவிர சோதனை நடத்தியபோது சங்குமால் பகுதியில் உள்ள சிங்காரவேலன் பூங்கா அருகே பதுங்கியிருந்த இருவர் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்களிடமிருந்து 270 ஜெலட்டின் குச்சிகள், 260 டெட்டனேட்டர், 21ரோல் வயர்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில் ஒருவர் இலங்கை அகதியான - திருச்சி முகாமில் தங்கியுள்ள - பாலு என்ற பாலுச்சாமி என்பது தெரியவந்தது. மற்றவர் தனுஷ்கோடியைச் சேர்ந்த வைரகுண்டு என்ற முனியசாமி.

இவர்கள் இருவரையும் இராமேஸ்வரம் பொலீஸார் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர். (ஒ)

## மேசன் தொழிலாளி வீழ்ந்து காயம்!

யாழ்ப்பாணம்,மே7

கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த மேசன் தொழிலாளி ஒருவர் சாரமரம் முறிந்ததில் கீழே கற்களின் மேல் விழுந்து தலையிலும் கைகளிலும் காயமடைந்தார்.

கல்வியங்காடு மூன்றாம் கட்டைச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், இருபாலையைச் சேர்ந்த தளையசிங்கம் அபூர்வசிங்கம் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-15)

## பளைப் பிரதேச விளையாட்டு கழகங்களுக்கு

யாழ்ப்பாணம்,மே7

பளைப் பிரதேச செயலக பிரிவில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பகல் 12 மணிக்கு புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலக விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சி.ஜெயகுமார் கேட்டுள்ளார். (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும்

செல்வி பூ.வனிதா அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பூவிலிங்கம் மரியமுத்து

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,* பிரதேச செயலரும், அனைத்து
*யாழ்ப்பாணம்.* (3520) உத்தியோகத்தர்களும், *நலன்புரிச் சங்கம்.*

## மரண அறிவித்தல்கள்

### சிங்காரவேலு மாசிலாமணி

ஹற்றனைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது வட்டுக்கோட்டையில் வசித்தவராகிய சிங்காரவேலு மாசிலாமணி அவர்கள் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) 05.05.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரவிச்சந்திரன் (ரவி) மற்றும் சுமதி (சுவிஸ்), சன்ஜிவ்குமார், சுதர்ஸன், தர்மினி, ரிஷிகேஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயராஜ் (சுவிஸ்), சுபாஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷ்யந்தி, நிரோஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"தேவி இல்லம்"* தகவல்:-
*வட்டு.கிழக்கு,* மனைவி, பிள்ளைகள்,
*வட்டுக்கோட்டை.* (3522) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை

(ஓய்வூதியர் - பொலீஸ் திணைக்களம்)

கோப்பாய் தெற்கு, பழைய தபாற்கந்தோர் முன் ஒழுங்கையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை 04.05.2002 சனிக்கிழமை மதியம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் முன்ஒழுங்கை,* தகவல்:
*கோப்பாய் தெற்கு,* திருமதி செ.பாக்கியம்
*கோப்பாய்.* (3525) (மனைவி)

### கண்ணுத்துரை அரிதாஸ்

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணுத்துரை அரிதாஸ் 01.05.2002 புதன்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் கண்ணுத்துரை - காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி தம்பதிகளின் மருமகனும் லோகேஸ்வரி (சுவிஸ்) அவர்களின் அன்புக் கணவரும் சுவிஸில் வசிப்பவர்களான பிரதீபன், குகதீபன், துஷாந்தினி, ஜெகதீபன், சுபதீபன் ஆகியோரின் தந்தையாரும் சுரேகாவின் மாமனாரும் மகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற தர்மதாஸ், தேவதாஸ் (பங்காளர், T.M.B. என்ரப்பிறைஸ் 18, 4ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பரமேஸ்வரி (கொழும்பு), ரவீந்திரன் (சுவிஸ்), பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11/1A, ஸ்கோபிட் பிளேஸ்,* தகவல்:
*கொழும்பு-3.* (3526) க. தேவதாஸ்

## பசுமாட்டைக் காணவில்லை

சிவப்பு நிறமுள்ள, கொம்பு வளைந்து வெட்டப்பட்ட ஜேசி இன பசுமாட்டை கடந்த 5ஆம் திகதி முதல் காணவில்லை. தகவல் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திரு.சு.சிவபாலன்,
194, நாவலர் றோட் (குமரன் மில்), யாழ்ப்பாணம். (3528)


## பிறீமா மா விநியோகம்

இன்று (07.05.2002) செவ்வாய்க்கிழமை கப்பலில் இருந்து மா இறக்கப்படவுள்ளதால் மாவை துறைமுகத்திலிருந்து நேரடியாகப் பெற விரும்புபவர்கள், எம்மிடம் ஓடர்களைப் பதிவுசெய்யும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வி.எஸ்.பி. குறூப்
*99-105, மின்சார நிலையவீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல.: 2150,2140* (C/22042)


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

கடந்த 05.05.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தின் 2002 ஆம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

*மாவட்ட தலைவர்* - திரு.சி.சுந்தரலிங்கம்
(லிங்கம் பேக்கரி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)

*மாவட்ட உப தலைவர்* - திரு.இ.பேரின்பநாயகம்
(ஸ்ரீகூபா பேக்கரி, சுதுமலை, மானிப்பாய்)

*மாவட்ட செயலாளர்* - திரு.கு.காந்தரட்ணம்
(ஜெயக்குமரன் பேக்கரி - மானிப்பாய்)

*மாவட்ட உப செயலாளர்* - திரு.அ.செகராஜசிங்கம்
(பகீரதன் பேக்கரி, கைதடி)

*மாவட்ட பரிசோதகர்* - திரு.இ.அமரசேனாபதி
(அம்பாள் பேக்கரி, வல்வெட்டித்துறை)

*தலைமைச் செயலகம்,* நிர்வாகம்,
*559, நாவலர் வீதி,* யாழ்./மா/பே/உ/சங்கம்.
*யாழ்ப்பாணம்.* (C/22041)


நாகம்ஸ் சுன்னாகம்
றொப்ஸ்டார் பிரசாந்த்,
சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ் (ரீஸ்)
காட்சிகள்:11.00,3.00 (புதிய நேரம்)
நாளை முதல் கண்ணுபடப்போகுதையா
(3524)

ராஜா யாழ்ப்பாணம்
4ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி
பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/21980)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், மீனா, மனோரமா,
மணிவண்ணன் நடித்த
பெரியண்ணா
தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.தே.)
(C-21981)

# ஒரே வீதியில் 5,000 பனை மரங்களை படையினர் வெட்டி வீழ்த்தியுள்ளனர்!

## காப்பாற்றக்கோரி மன்றாடுகிறார் அபிவிருத்திச் சபைத் தலைவர்

கொழும்பு,மே7

"பாதுகாப்புப் படையினரால் பனை மரங்களுக்கு அழிவு வந்துவிட்டது. ஒரே வீதியில், மன்னார் - தலைமன்னார் வீதியில் இருமருங்கும் ஐயாயிரம் பனைகளை வெட்டி வீழ்த்திவிட்டார்கள். தடுத்து நிறுத்துங்கள். கற்பக தருவைக் காப்பாற்றித் தாருங்கள்!" - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனிடமும் மன்றாடுகின்றார் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம்.

பாரிய இயந்திரங்கள் கொண்டு மன்னாரில் பல இடங்களிலும் பனை மரங்களை இராணுவத்தினரும் கடற்படையினரும் வெட்டி வீழ்த்தி அழித்து வருகிறார்கள். இதைப் பொறுக்க முடியாத மன்னார் பொதுமக்கள் ஓடோடிச்சென்று மன்னார் அரச அதிபரிடம் முறையிட்டனர். பனை அழிப்பைத் தடுத்துநிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

பாதுகாப்புப் படையினரிடம் அரச அதிபர் பேசிப்பார்த்தார். பலனில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதிபெற்றே தாங்கள் பனை மரங்களை அழித்துவருவதாகப் படையினர் கூறுகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்ன, எவருமே பனை மரங்களை இப்படிக் கண்டபடி தறித்து வீழ்த்த முடியாது. சட்டப்படி அது குற்றம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டுத் திருத்த) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் பனை மரங்களைத் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம் என்று 1993அக்டோபர் 27ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

கடைசிக் கட்டமாகவே பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவபாதம், வடக்கு - கிழக்குக்கு மட்டுமன்றி இன்று நாடு முழுவதற்கும் வாழ்வளித்துவரும் கற்பகதருவை அழிவிலிருந்து காப்பாற்றித்தருமாறு பிரதமரையும் அமைச்சரையும் மன்றாட்டமாகக் கேட்டுள்ளார். (உ)

# கட்சியை மீறி வாக்களிக்க எம்.பிக்களை அனுமதிப்பதா?

## சட்டத்திருத்தத்தை எதிர்க்கிறது இ.தொ.கா.

கொழும்பு,மே7

கட்சியின் முடிவுக்கு மாறாக - மனச்சாட்சிப்படி - நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் எம்.பி. ஒருவரை அதற்காகப் பதவி நீக்குவதற்கு கட்சிக்கு அதிகாரமளிக்கும் தற்போதைய சட்ட ஏற்பாடுகளை அரசமைப்பிலிருந்து நீக்குவதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கும்.

இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் யோகராஜன் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது - கட்சி முடிவுக்கு மாறாக செயற்படும் எம்.பியை கட்சியிலிருந்தும் அதன்மூலம் எம்.பி. பதவியிலிருந்தும் வெளியேற்ற வகைசெய்யும் தற்போதைய சட்ட ஏற்பாடுகளை நீக்குவது- போன்றவை அடங்கிய அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர ஐ.தே.முன்னணி அரசு முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

அதில், கட்சி மாறி வாக்களிக்க எம்.பிக்களுக்கு இடமளிக்கும் சட்டத் திருத்த ஏற்பாட்டையே இ.தொ.கா. எதிர்ப்பதாகக் கூறப்படுகின்றது.(உ-12)

### தீ விபத்து!

கண்டி ஹெலிஓயா நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் பல கடைகள் தீக்கிரையாகின.

இத்தீவிபத்தில் ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளுக்கு சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாடாளுமன்று கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடும்.

தேசிய பாதுகாப்பு வரிக்கு நிதி அறவிடுவதை ரத்துச்செய்யும் நகல் சட்டமூலம்மீது நாளை சபையில் விவாதம் நடைபெறும். (உ)

## சமாதான முயற்சியைக் குழப்பி

# இலங்கையில் இரத்தக்களரியை ஏற்படுத்த முயற்சிக்கிறது ஜே.வி.பி.

## ஐ.தே.க. பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,மே7

சமாதான முயற்சிகளைக் குழப்புவதன் மூலம் நாட்டில் மீண்டும் இரத்தக்களரியை ஏற்படுத்த ஜே.வி.பி. முயல்வதாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்துமாறு ஜே.வி.பி. கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிணங்கவே ஜே.வி.பி. செயற்பட்டுவருகிறது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜெயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு இலங்கையில் சமாதான முயற்சிகள் ஏற்பட்டவேளை ஜே.வி.பி. ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. அதேபோன்று இம்முறையும் சமாதான முயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்த ஜே.வி.பி. முயன்று வருகிறது' என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

'லண்டனில் ஆடம்பரமாக வாழ்ந்து வரும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, நாட்டில் ஏற்படும் சமாதான முயற்சிகளைக் குழப்புவதில் ஈடுபாடு காட்டுவது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை என்றும் ஜெயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (ஒ-12)

# பொ.ஐ.மு.-ஜே.வி.பி. மீண்டும் நெருக்கம்!

கொழும்பு,மே7

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் மீண்டும் நெருங்கிவர இருக்கின்றன. இது தொடர்பான பேச்சுக்கள் இரண்டு கட்சிகளுக்கும் இடையே நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவிருக்கும் சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை அடிப்படையாக வைத்து இரு கட்சிகளும் இணக்கம் ஒன்றுக்கு வரவிருக்கின்றன.

இணக்கம் ஏற்படுமேயானால் கெஸ்பாவை உள்ளூராட்சி மன்றத்தை பொ.ஐ.முன்னணிக்கும் ஹாலி-எல உள்ளூராட்சி மன்றத்தை ஜே.வி.பிக்கும் விட்டுக்கொடுத்து இரண்டு கட்சிகளும் போட்டியிடும்.

இரண்டு கட்சிகளும் பொது உடன்பாடொன்றுக்குவர பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் -

உடன்பாடு ஏற்பட்ட பின்னர் ஐ.தே.முன்னணி அரசுக்கு எதிராக விரிவான போராட்டம் நடத்தப்படும் என்றும் -

பொ.ஐ.முன்னணியின் கொழும்பு மாவட்ட எம்.பி.ஒருவர் கூறியிருக்கிறார்.

---

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வைத்து அவர்களை திருகோணமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஜங்கரன் வரவேற்று கிறீன் வீதியில் உள்ள அரசியல்துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

இந்த இரண்டாவது அணியில் மகளிர் அணித் தலைவி கிருஷ்ணா உட்பட 4பெண் உறுப்பினர்களும், அரசியல் பொறுப்பாளர் ரூபன் உட்பட 12ஆண் உறுப்பினர்களும் அடங்கியிருந்தனர். (ஒ)

(மற்றொரு செய்தி இரண்டாம் பக்கத்தில்)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ அரசின் பொது நிதி, நிர்வாகம், சுதந்திரமான நிதி பரிபாலன ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

★ அரச தலையீடுகள், கட்டுப்பாடுகள் இன்றி ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட வழிவகுக்கப்படும். இதற்கேற்ப ஊடகங்கள் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தப்படும்.

★ விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை முறை முற்றாக ஒழிக்கப்படும்.

- மேற்குறிப்பிட்ட திருத்தச் சட்ட வரைவுகள் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின் நடைமுறைக்கு வரும் என்று அமைச்சர் பீரிஸ் கூறினார்.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கததில்)

### அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றவை. முதற்கட்ட நேரடிப் பேச்சின்போது பரஸ்பர கருத்துப் பரிமாற்றங்களும் பேச்சுத் தொடர்பான அட்டவணை தயாரிப்புமே நடைபெறும். அதன்பின் நடைபெறும் பேச்சுக்களின்போது இரு தரப்பினரதும் கோரிக்கைகள் முன்வைக்கப்படும். அப்போது அரசு, இந்த எதிர்ப்பாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அரச தரப்பின் கோரிக்கைகளை முன்வைக்கும்.

எனவே ஜே.வி.பியினரைப் பற்றியோ, மற்றைய எதிர்க்கட்சியினரைப் பற்றியோ இப்போது அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

- என்றார் அமைச்சர் பீரிஸ்.

"எங்களுடைய சமாதான அணுகுமுறைகளுக்கு அமெரிக்க வல்லரசு உட்பட சர்வதேச நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளன. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பொருளாதார உதவிகளை வழங்கவும் அவை முன்வந்துள்ளன. எனவே, நாம் ஏற்கனவே அறிவித்தபடி புலிகளுடனான நேரடிப் பேச்சு ஜூன் மாத இறுதியில் தாய்லாந்தில் நடைபெறும். இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றும் பேராசிரியர் பீரிஸ் உறுதிபடக் கூறினார். (உ)

### பரஸ்பரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சாட்சியங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் அது தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ)

### நீர்கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளிடம் நிலைமையை எடுத்துக்கூறியதைத் தொடர்ந்து அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

தகுந்த ஆவணங்களின்றி இலங்கையை விட்டு வெளியேற முயற்சித்த சுமார் 180 இலங்கையர் நீர்கொழும்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-12)


**அறிவித்தல்**

இன்று (07-05-2002) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கண் வைத்திய ஆலோசனை நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது என்பதை அறியத்தருகிறோம்.

நேரிலோ அன்றி தொலைபேசி மூலமோ பார்வையிடும் திகதியை அறிந்துகொள்ளவும்.

**அப்பலோ வைத்திய நிலையம்**

16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(3527) தொலைபேசி:3305

**BRIGHTMAN**

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2004 பிரத்தியேக வகுப்பு

புவியியல் - திரு.ஜெகன்

பொருளியல் - திரு.சண்

ஆரம்பம்: 09-05-2002

(3514) வியாழன் 4 p.m.



**விற்பனையாகிறது!**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

**புலமைப்பரிசில் வழிகாட்டியும் வினா விடையும்**

விலை - 200/-

வியாபாரிகளுக்கு விசேட கழிவு

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/22043)

**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்**

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - | 07.05.2002 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி. |
| கைலாச வாகனம் | - | 08.05.2002 புதன்கிழமை இரவு 7.00மணி |
| மஞ்சம் | - | 12.05.2002 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி |
| சப்பறம் | - | 15.05.2002 புதன்கிழமை 7மணி |
| இரதோற்சவம் | - | 16.05.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணி |
| தீர்த்த உற்சவம் | - | 17.05.2002 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி |
| பூங்காவனம் | - | 18.05.2002 சனிக்கிழமை மாலை 5.00 மணி. |

தினமும் இரவு 9மணிக்கு விநாயகர் புராணம் தொடர் சொற்பொழிவு இடம்பெறும். நிகழ்த்துபவர் சைவ சித்தாந்த பண்டிதர் கந்தசத்தியதாசன்.

- விநாயக அடியார்கள்.

(C/22045)

**கண்ணீர் அஞ்சலி**

பருத்தித்துறை இறங்குதுறைப் பொறுப்பதிகாரி

இரா.சிவலிங்கம் அவர்களின்

அன்புத் தாயார்

**திருமதி இராமநாதன் இராமாசிப்பிள்ளை**

அவர்கள் நேற்று (06.05.2002) திங்கட்கிழமை காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சக உத்தியோகத்தர்கள்,

பருத்தித்துறை இறங்குதுறை.

(C/22044)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.